Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU





முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | தை 22 | ஞாயிற்றுக்கிழமை | (05.02.2012) | பக்கங்கள் 16 | ஓசை – 127




10,000 யூஸ் பாழாகியது (04)



ஆட்டம் காணும் கோட்பாடு (06)



ரணிலுக்கு எதிராகவும்... (08)



தமிழ்ப் பாடம் கட்டாயம் (12)

# சமாதானத்தை நிலைநாட்ட தனியொருவரால் மட்டும் முடியாது

## அனைவரையும் ஒத்துழைக்க கோருகிறார் ஜனாதிபதி



(அநுராதபுரம்)

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த தனியொருவரால் மட்டும் முடியாது எனவே நீடித்து நிலைக்கக் கூடிய சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது பங்களிப்பினை வழங்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற இலங்கையின் 64 ஆவது சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

வெளிநாடுகளிலுள்ள பயங்கரவாத சக்திகள் எமக்கு எதிராக சதி வலைகளைப் பின்னி வருகின்றன. இங்குள்ள சிலரும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்றனர். சில நாடுகளில் இடம்பெற்ற பிரிவினைவாதத்தினை இலங்கைக்குள்ளும் நடத்துவதற்கு அவர்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தலைமையில் அபிவிருத்திக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டஙகளுக்கான அபிவிருத்திக்குழுக் கூட்டம் நாளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ். செயலகத்தில் நண்பகல் 12 மணி முதல் நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண அரச அதிபர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இக்கூட்டத்தில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி பிரதிநிதிகள், அமைச்சின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், வடமாகாணத் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் பங்குபற்றுவார்கள் என வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். (பா)

## பொலிஸ், காணி அதிகாரம் குறித்து ஆராய்ந்து கருத்தை கூறலாம்

### கருணாவிற்கு பிள்ளையான் ஆலோசனை

(கொழும்பு)

13 ஆவது திருத்தம், பொலிஸ் அதிகாரம் மற்றும் காணி அதிகாரம் தொடர்பில் நன்றாக ஆராய்ந்து கருத்துக்களை தெரிவிக்குமாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் மீள் குடியேற்ற அமைச்சர் முரளிதரனை கேட்டுள்ளார் .

ஒரு பகுதிக்கு மாத்திரம் பொலிஸ் அதிகாரம் வழங்குவதில் பயனில்லை என்றும், பிரதேச செயலர்கள் மற்றும் முதலமைச்சர்கள் ஊடாக காணி அதிகாரம் நன்றாக செயற்படுத்தப்படுவதாக கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்த கருத்துக்கு பதில் அளிக்கும் வகையிலேயே முதலமைச்சர் பிள்ளையான் இதனை தெரிவித்ததாக லங்கா சி நிவ்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

## 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த கட்சிகளுடன் பேசத்தேவையில்லை

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கட்சிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தத் தேவையில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் அரசியலமைப்பில் சட்டமாக உள்வாங்கப்பட்டுள்ளது. அதனை நடைமுறைப்படுத்த பேச்சுவார்த்தைகள் மூலம் காலத்தைக் கடத்துவது தேவையற்றதாகும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிததுள்ளதாவது,

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சருடனும் ஜனாதிபதி இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் , காணி மற்றும் மாகாண சபைகளை இணைத்தல் முறைமை ஆகிய விடயங்கள் இந்த அரசியலமைப்பு திருததத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி ஏற்கனவே கூறியுள்ள நிலையில் அதனை அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டும்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரே அதற்கு அப்பால் அதிகாரப்பகிர்வு குறித்து பேச்சுவார்த்தைகளில் முனைப்புக் காட்ட (15 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு இராஜதந்திரிகள் குழு குடாநாட்டிற்கு இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக அறிந்துகொள்ளும் வகையில் சுமார் 70 பேர் அடங்கிய வெளிநாட்டு இராஜதந்திரிகள் அடங்கிய குழுவொன்று இன்றைய தினம் குடாநாட்டிற்கு வருகைதர உள்ளதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

நேற்றைய தினம் அநுராதபுரத்தில் நடைபெற்ற இலங்கையின் 64 ஆவது சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொண்ட இக்குழுவினர் இன்றைய தினம் குடாநாட்டிற்கான (15 ஆம் பக்கம் பார்க்க)

## நீர் மின்வலு மின்சாரம் இன்று முதல் குடாநாட்டிற்கு

### ஆரம்ப நிகழ்வு பரந்தனில்

யாழ்ப்பாணத்திற்கான நேரடி மின்விநியோகம் இன்றைய தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இந்த நேரடி மின்விநியோகத்தை கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ள மின் சக்தி மின்வலு அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க ஆரம்பித்து வைக்கவுள்ளார். தென்னிலங்கையிலிருந்து வரும் நீர் மின்வலு வழங்கலின் மூலமான 33 ஆயிரம் உயர் மின் அழுத்த இணைப்பு வடமாகாணத்துக்கு 25 ஆண்டுகளுக்குப் (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக அரசுடனான உறவினை அரசு முறித்துக்கொள்ள கூடாது

### பேராசிரியர் றொகான் குணரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழக அரசாங்கத்துடனான உறவுகளை அரசாங்கம், முறித்துக்கொள்ளுமாக இருந்தால் அது புத்திசாதுரியமான தீர்மானமாக இருக்க மாட்டாதென சிங்கப்பூர் பல்கலைக் கழகப் பேராசிரியர் றொகான் குணரட்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குலக நாடுகளுடனான உறவுகளை அரசாங்கம் வலுப்படுத்திக்கொள்வதுடன் , இந்தியாவுடனான உறவுகளையும் மேலும் வலுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைவதனை தடுப்பதற்கு இந்தியாவுடனான உறவு மிகவும் அவசியமானது தமிழக அரசாங்கத்துடனான உறவுகளை முறித்துக்கொள்வது புத்திசாதூரியமான தீர்மானமாக கருத முடியாது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை தடுக்கக் கூடிய ஆற்றல் தமிழக அரசாங் கத்திடம் காணப்படுகின்றது.

இந்தியாவை அதிருப்திக்கு உள்ளாக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை அமையக் கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தம் அமையாது

### என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

13 ஆம் திருத்தச் சட்ட மூலமோ அல்லது அதனைத் தாண்டிய தீர்வுத் திட்டமோ தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையாது எனவும்,

இலங்கைக்கான தனி யான அடையாளத்தை உருவாககுவதன் மூலமே பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கமுடியும் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இனங்களின் அடிப்படையில் தனித்தனி அடையாளங்களை களைந்து ஐக்கியஇலங்கையர் என்ற அடையாளம் உருவாக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்

## வடமாகாண பாடசாலைகள் வேலைப்பகுதி பணிப்பாளர் அறிவுரை



(திருநெல்வேலி)

தோல்வியைக் கண்டு துவண்டு விடமால் மாணவர்கள் விடாமுயற்சியுடன் செயற்பட்டால் வாழ்வில் அவர்கள் நிச்சயம் உயர்வடைய முடியும். முயற்சி திருவினையாக்கும். ஆர்வம், துடிதுடிப்பு, திறமை, புத்துணர்வோடு செயற்படும் மாணவர்கள் சிறப்பான நிலையை அடைவார்கள் என வடமாகாண பாடசாலைகள் வேலைப் பகுதிப் பணிப்பாளர் க.குகநேசன் தெரிவித்தார்.

யாழ். உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் அதிபர் கு.திலீபன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய பணிப்பாளர், பல பாடசாலை நிகழ்வுகளுக்கு நான் சென்றுள்ளேன். அங்கெல்லாம் பெற்றோர்களின் பங்களிப்பு மிகக் குறைவானதாகவே இருந்தது. ஆனால் இவ்வித்தியாலயத்தில் பெற்றோர்கள் மட்டுமல்ல, பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன்விரும்பிகள், அயலவர்கள், மாதர் சங்கம், சனசமூக நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் என அனைவரது ஒத்துழைப்பையும் பார்க்க முடிகிறது. இது இவ்வித்தியாலய அதிபருக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். இவர்களது ஒருங்கிணைந்த செயற்பாடுகளினால் இவ்வித்தியாலயத்தின் எதிர்காலம் ஒளிமயமானதாக விளங்கும் என்பது நிச்சயம்.

எனது கல்லூரி வாழ்வில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் முதல் தடவையில் என்னால் சித்தியடைய முடியவில்லை. இரண்டாம் தடவையும் அப்படியே. இருந்தும் எனது விடாமுயற்சியால் மூன்றாம் தடவை போதிய பெறுபேறுகளுடன் சித்தியடைந்து நான் ஒரு பொறியியலாளர் என்ற உயர் பதவியில் உள்ளேன். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் அவர்களின் வாழ்வில் வசந்தம் வீசும் என்றார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் முகாமையாளர் க.சகாதேவனும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் க.திருநாவுக்கரசு, கிராம அலுவலர் அ.நிஷாந்தன் ஆகியோரும் கலந்தகொண்டனர்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (137)

# மந்திகை கண்ணகை அம்மன் மகா கும்பாபிஷேகம் இன்று

(வடமராட்சி)

புலோலி தெற்கு மந்திகை கண்ணகை அம்மன் கோவில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் இன்று காலை 7.14 முதல் 8.23 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறும்.

மஹாகும்பாபிஷேகத்துடன் தூப அபிஷேகம் மஹாகவிர் நிவேதனம் வைத்து தேவர்கள் வழிபாட்டிற்காக திருக்கதவம் காப்பிடுதல், திருமுறை ஓதி திருக்கதவம் திறத்தல், தசமங்கள தரிசனம் ஆசியுரை என்பன இடம்பெறும். மாலை திருவூஞ்சலும் இடம்பெறும். நாளை முதல் 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (116)

# ‘ராவணமா’ நடன – நாடக நிகழ்வு

(கொழும்புத்துறை)

கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் ஜனன தினத்தை நினைவு கூரும் முகமாக நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியம் வழங்கும் மாயா கிருஷ்ணராவின் ‘ராவணமா’ என்னும் சமகால நடன நாடக நிகழ்வு இன்று பி.ப. 5.00 மணிக்கு நிதியத்தின் இயக்குநர் தலைமையில் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையக அரங்கில் இடம்பெறும்.

இந்நிகழ்வானது 2011 ஆம் ஆண்டு மாசி மாதம் இந்தியாவின் புதுச்சேரியில் இடம்பெற்ற ராமாயண விழாவில் இடம் பெற்று பின்னர் ராவ்வினால் டில்லியில் இடம்பெற்ற பாரத ரங் மகோத்சவ் நிகழ்வு உட்பட பல பாகங்களில் அழைப்பின் பேரில் அரங்கேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (52)

# மண்கும்பானுக்கு மின்சார இணைப்பு

(வேலணை)

வேலணை பிரதேசத்தில் மண்கும்பானில் மின்சாரம் வழங்கும் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



இதனை வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா நேரில் சென்று பாவையிட்டுள்ளார். அத்துடன் அப்பிரதேச மக்களையும் சந்தித்து கலந்துரையாடி அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்தார்.

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு மானிய விதை வெங்காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் விதை வெங்காயம் வழங்கப்படுகிறது.

விவசாயச் செய்கையை ஊக்கப்படுத்தும் விதமாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் மானிய அடிப்படையில் இந்த விதை வெங்காயத்தை உணவு மற்றும் விவசாய தாபனம் வழங்கி வருகிறது.

தற்போது இந்த அமைப்பு பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் கிராம அலுவலர்களுக்கூடாக இந்த மானியத்தை வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

ஏறக்குறைய 300 இற்கு மேற்பட்ட விவசாயிகள் இதன்மூலம் பயன்பெறுவர் என்று பிரதேசக் கமக்காரர் அமைப்புத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதைத் தவிர, இந்த அமைப்பு விவசாய உபகரணங்கள் உட்பட மேலும் பல உதவிகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

# வானொலியில் நேரடி அஞ்சல்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பன்னாலை மயிலையம்பதி அருள்மிகு ஸ்ரீஞானவைரவப் பெருமானின் மஹாகும்பாபிஷேக பெருவிழா நாளை காலை 6.00 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக நிகழ்வுகள் 7.00 மணிமுதல் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன யாழ். எப்.எம் அலைவரிசையூடாக நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது.

இந்நேரடி அஞ்சல் நேர்முக வர்ணனையை வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் தொகுத்து வழங்கவுள்ளார். (60)

## இன்னுமோர் உலகம் நூல் வெளியீட்டு விழா

(வடமராட்சி)

வடமராட்சி கொற்றையூர் பி.கிருஸ்ணானந்தனின் இன்னுமோர் உலகம் எனும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று காலை 9.30 இற்கு கொற்றாவத்தை செட்டித்தறை சித்தி விநாயகர் கல்யாண மண்டபத்தில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது. (116)

## மகாபாரதம் தொடர் சொற்பொழிவு

(வடமராட்சி)

ஸ்ரீவல்லிபுர ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெயரியாழ்வார் ஆச்சிரமத்தில் இன்று காலை 10.30 மணிக்கு ஆலய சுற்றுப்பிரகார மூர்த்தி பூசைகள் நிறைவுபெற்றதும் ஆச்சிரம மண்டபத்தில் பண்டிதர் பொன்.சுகந்தனின் மகாபாரதம் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும் என ஆச்சிரம மடாதிபதி வை.ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (116)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல . விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021- 222 8680, 0775925088 (C/1205)


# இலங்கையின் 64 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்

(அநுராதபுரம்)

இலங்கையின் 64ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று முற்பகல் அநுராதபுரத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றன. இதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய வைபவம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம் பெற்றது.

ஆச்சரியமிக்க தேசத்தை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தின தேசிய வைபவம் அநுராதபுரம் ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வருகையினை தொடர்ந்து சுதந்திர தின நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலில் ஜனாதிபதியினால் தேசிய கொடி ஏற்றப்பட்டதுடன், பாடசாலை மாணவர்களின் வரவேற்பு கீதம் இசைக்கப்பட்டது.

பின்னர் நாட்டிற்காக உயிர் நீத்த இராணுவ வீரர்களை நினைவுகூர்ந்து 21 கௌரவ வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனையடுத்து ஜனாதிபதி தமது சுதந்திர தின உரையை நிகழ்த்தினார்.

இதேவேளை, குடாநாட்டின் அரச செயலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் மற்றும் பாடசாலைகளிலும் தேசியக் கொடி ஏற்றல் நிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் வங்கிக் கட்டடங்கள், இராணுவக் காவல் அரண்கள் என்பவற்றிலும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

**வேலணையில்....**

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்கள் மற்றும் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் தேசியக் கொடி ஏற்றி சத்தியப் பிரமாணம் எடுத்து சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.


**நெடுந்தீவில்....**

நெடுந்தீவு பிரதேச சபையில் பிரதேச சபை தவிசாளர் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இவைதவிர தனியார் கடைகள், போக்குவரத்து பஸ்கள் மற்றும் ஆட்டோக்களிலும் தேசியக் கொடிகள் பறக்கவிட்டு சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாடப் பட்டதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (116)

## இலங்கையின் 64ஆவது சுதந்திர தின நிகழ்வின்போது....







கடவுள் உனக்குள்ளேயே இருக்கிறார். ஆனால் நீ அவரைத்தேடி எங்கெல்லாமோ அலைகிறாய், இடுப்பில் பிள்ளையை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் தேடிய கதையாகத்தான் கடவுளைத் தேடுவது இருக்கிறது.

- இராமகிருஷ்ணர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## இனியும் யார் குடி அற?

நாங்கள் விட்ட தவறுகள் பற்றி சுயவிமர்சனம் செய்துகொள்ளாமல், அவற்றை நாம் உணர்ந்து கொண்டோம் என்பதற்கு எந்த அறிகுறியும் காட்டாமலே தொடர்ந்தும் மக்களை எங்கோ நடத்திச் செல்வதும், பழைய அதேவிதமான கருத்துக்களை உதிர்ப்பதும் சரியாகுமா?

அரசியலாளர்கள், குருவானவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் குரலெழுப்பும் சமூகப்பிரமுகர்கள் தயைகூர்ந்து தங்களை ஒருமுறை கேட்டுப் பார்த்துக் கொள்ளவேண்டிய தருணம் இது. நமது மக்கள் அழிந்ததுக்கு, மாற்று இனத்தவர் அழிந்ததுக்கு, சமூகச் சுத்திகரிப்பு நடந்ததுக்கு, உட்படுகொலைகளுக்கு, மாற்றுக்கருத்து நெரிக்கப்பட்டதற்கு நாங்கள் காரணமோ உடந்தையோ இல்லை என்று மனப்பூர்வமாக நம்புபவர்கள் இந்தப் பத்திக்கு கல்லெறியக் கடவர்.

ஹென்றி லூயிஸ், 20 ஆம் நூற்றாண்டின் அசாத்தியச் செல்வாக்குப் பெற்ற பத்திரிகையான TIME பத்திரிகையைத் தோற்றுவித்தவர். TIME பத்திரிகை உலகப் பிரச்சினைகள் பலவற்றை முன்வைத்திருக்கிறது; அமெரிக்கப் பொதுக்கருத்தை உருவாக்கியிருக்கிறது.

ஆனால் ஐரோப்பாவில் ஹிட்லரும் அவரது நாஸிப் படையினரும் இலட்சக்கணக்கில் கொடூரமாகக் கொன்று குவித்த யூதர்களைப் பற்றி மௌனமாக இருந்திருக்கிறது. செர்பியர்கள், ரஷ்யர்கள் மீது ஜெர்மனி நிகழ்த்திய சித்திரவதையையும், படுகொலையையும் பற்றி அடிக்கடி மனிதாபிமானத்தோடு செய்தி வெளியிட்ட TIME, இலட்சக்கணக்கான யூதர்கள் போலந்திலும் இதர முகாம்களிலும் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டதை, ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

இதனால் பல இலட்சம் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்தது அமெரிக்கப் பொதுமக்களின் கவனத்தில் சரியாகப் பதிவாகவில்லை.

TIME பத்திரிகையில் முதன்முதலாக யூதப் படுகொலைகள் பற்றிக் கட்டுரை வந்த நாளில் (21-08-1944) நாஸிகள் 50 இலட்சம் யூதர்களை இந்தப் பூமியிலிருந்து நிரந்தரமாக அகற்றியிருந்தார்கள்.

TIME பத்திரிகையும் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டு நிறுவப்பட்ட பத்திரிகைதான். அதனுடைய அபரிமிதமான செல்வாக்குக்குக் காரணமே அதனுடைய இலட்சியங்களின் பிரதிபலிப்புத்தான்.

ஆனால், அதன் யூதத் துவேசம் இந்த நூற்றாண்டின் ஒரு மிகப் பெரிய, கோரமான, சோகமான பகுதியை அதன் பார்வையிலிருந்து மறைத்துவிட்டது. 1940 இல் அல்லது 41 லேயே TIME பத்திரிகை, ஜெர்மானியர் கையில் யூதர்கள் படும் இன்னல் பற்றிக் கடுமையாகக் குறிப்பிட்டிருந்தால் பல இலட்சம் யூதர்கள் உயிர் தப்பியிருக்க முடியுமோ என்று நினைக்க இடமிருப்பதாக இன்றைய ஆய்வாளர்கள் எழுதுகிறார்கள்.

இதுபோலவே, மனித குலத்தின் ஒட்டுமொத்தமான மனசாட்சிக்கு ஒளிவீசுபவராகப் படைப்பிலக்கியம் படைத்த டொஸ்ரோயெவ்ஸ்கி என்ற மாபெரும் கலைஞரும் தனது யூதத் துவேசம் காரணமாக, ஸார் மன்னரின் படைகள் போலந்துக் குடிமக்களைக் கொன்றபோது எதுவும் நடக்காதது போலப் பேசாதிருந்து விட்டார்.

ஸ்டாலின் காலத்திய உட்கொலைகள் பற்றி மௌனம் சாதித்த மக்ஸீம் கோர்க்கி பற்றியும் இது கேட்கப்படுகிறது. யூதப் படுகொலைகளுக்கு மௌனம் சாதிப்பதை முடிவாகவே எடுத்திருந்த அந்நாளைய பாப்பரசர் மற்றும் திருச்சபைகள் பற்றிய ரோல்·ப் ஹொஷூத் நாடகத்தின் விமர்சனக் கட்டுரையை சிலநாட்களுக்கு முன் தினமுரசு தந்திருந்தது.

எப்படி இந்தத் துவேச உணர்ச்சி அவர்களையும் மீறியதாக அவர்களுள்ளே புதையுண்டு கிடக்கிறது? பல அநீதிகளை அவலங்களை எப்படி இந்த சமூகம் – அறிஞர்கள், படித்தவர்கள், குருவானவர்கள் எல்லோரும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்; பார்த்துக் கொண்டிருக்க முடிகிறது என்பது வரலாற்றில் தொடரும் கேள்வி. பதிலாகக் கிடைப்பது இனத்துவேசம் என்பதே.

இதுபற்றிய குற்றவுணர்வோ சுயவிமர்சனமோ இல்லாமல் தொடர்ந்தும் இனத்துவேசமுடன் கருத்துக்களை வெளியிடுபவர்களையும், அரசியல் செய்பவர்களையும் நாம் எச்சரிக்கையோடு நோக்க வேண்டியிருக்கிறது. அபிராமிப்பட்டர் கேட்டது போல, இவர்களின் இந்த வீம்புப் பேச்சுக்களெல்லாம், இனியும் யார் குடி அற?

- ஆசிரியர்

# தரிப்பிடத்தில் நிற்க மறுக்கும் பேருந்துகளால் பயணிகள் அவதி

(கொடிகாமம்)

வெளிமாவட்ட சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பேருந்துகள் கொடிகாமம் பேருந்து நிலையத்தின் ஊடாக தனது சேவையைத் தொடரவேண்டும் என பயணிகள் எதிர்பார்க்கின்றனர்.

வெளிமாவட்டத்தில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு வருகின்ற தனியார் பேருந்துகள் கொடிகாமத்தில் பயணிகளை இறக்கும் போது வெவ்வேறு இடங்களில் இறக்கி விடுகின்றனர். கொடிகாமம் சந்தியில் இறக்குவதனால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடிபோக்குவரத்துப் பொலிஸாரின் நடவடிக்கைகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு தனியார் பேருந்து உரிமையாளர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

கொடிகாமம் சந்தியில் இருந்து 50மீற்றர் முன்னால் அல்லது பின்னால் ஏ-9 வீதியில் இவ்வாறு பயணிகள் இறக்கி விடப்படுகின்றார்கள்.

இத்தகைய பயணிகள் பருத்தித்துறை, நெல்லியடி போன்ற இடங்களுக்கு பயணிக்க வேண்டுமாயின் தமது உடமைகளை மிகுந்த சிரமத்துடன் எடுத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர்.

மேற்படி சிரமத்தை கருத்தில் கொண்டு கொடிகாமம் வரை பயணிக்கும் பயணிகளை கொடிகாமம் மத்திய பேருந்து நிலையத்தில் இறக்கி பயணிகள் சிரமத்தை குறைக்குமாறு மக்கள் எதிர்பார்க்கின்றனர். (17)

## ஆபாச புத்தகம் விற்பனை 2500 ரூபா அபராதம்

ஆபாச விடயங்கள் கொண்ட புத்தகம் விற்பனை செய்த குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட புத்தகசாலை உரிமையாளர் ஒருவருக்கு கொழும்பு கோட்டை நீதவான் 2500 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

கொள்ளுபிட்டியிலுள்ள இப்புத்தகவிற்பனை நிலையத்துக்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் மாறுவேடத்தில் சென்றபோது அவருக்கு ஆபாச புத்தகம் விற்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

பிலியந்தலையைச் சேர்ந்த லோரன்ஸ் பேர்னார்ட் ரஞ்சித் எனும் எனும் நபர், 3000 ரூபாவுக்கு அப்புதகத்தை விற்றதாகவும் ஆங்கில மொழியிலான இப்புத்தகம் 292 பக்கங்களைக் கொண்டிருந்ததாகவும் நீதிமன்றில் கொள்ளுபிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (17)

# வவுனியாவை கலக்கிய கொள்ளையர் குழு சிக்கியது

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் இந்தச் சந்தேக நபர்கள் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் வவுனியா சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். புத்தளம், கஹடகஸ்திகிலிய மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்களிடம் நடத்திய விசாரணைகளின் மூலம் கொள்ளையிடப்பட்ட பொருட்களை மீட்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## பிரியாவிடையும் வரவேற்பும்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகப் பணியாற்றி இடமாற்றலாகிச் சென்ற திருமதி எழிலரசி அன்ரன் யோகம் அவர்களுக்கான பிரியாவிடையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றலாகி வந்துள்ள பிரதேச செயலர் சு. முரளிதரன் அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவல்கட்டு மகாத்மா சன சமூக நிலையத்தில் நிலையத்தலைவர் க.கருணசிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (104)

# சிறைச்சாலை மோதல் சம்பவம் அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதல் தொடர்பிலான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட குழுவின் ஆரம்ப அறிக்கை புனர்வாழ்வு மற்றும்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய சில நடவடிக்கைகள் குறித்து இந்த அறிக்கையில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் கைதிகளின் உறவினர்களால் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் அதிநவீன தொழில்நுட்பம் மூலம் சோதனைக்கு உட்படுத்துவதற்கும், சிறைச்சாலைகளில் ஸ்கான் இயந்திரங்களைப் பொருத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதுதவிர சிறைச்சாலை வைத்தியசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறும் விசாரணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இதற்கமைய வைத்தியசாலைகளில் மருந்து வகைகளை உரியவாறு பேணுவதுடன், சிறைசசாலை உணவகங்களின் நிர்வாகத்தை முறையாக ஒழுங்குபடுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சுனாமி எச்சரிக்கை கோபுரம் கொக்கிளாயில் அமைப்பு

(கொக்கிளாய்)

கொக்கிளாய் அ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்டுவரும கொக்கிளாய் பிரதேசத்துக்கான சுனாமி எச்சரிக்கை கோபுரம் அமைக்கும் பணி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

சுனாமி எச்சரிக்கைக் கோபுரம் அமைக்கும் பணி கடந்த வருட இறுதிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு கட்டப் பணிகள் நிறைவடைந்திருந்தன.

தற்போது அதன் இறுதிக் கட்ட வேலைகளும் நிறைவடையும் நிலையில் உள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுள்ள இக்கோபுரம் அதன கொழும்புமையத்துடனான இணைப்பை இறுதிக்கட்டப் பணியின் போது ஏற்படுத்திக்கொண்டது.

தினமும் பரிசோதனை ஒலிகள் எழுப்பட்டு சுனாமி எச்சரிக்கை கோபுரத்தின் செயற்பாடு உறுதி செய்யப்படுமெனவும், ஒரு குறித்த தினத்தில் விரைவில் சுனாமி எச்சரிக்கை கோபுரத்தின் பயன்பாடு தொடர்பான விளக்கமும், ஒத்திகை நிகழ்வும் நிகழ்த்தப்படும் எனவும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் பணிபபாளர் தகவல் தெரிவித்தார்.


இக்கோபுரத்தின் ஊடாக கொக்கிளாய் பகுதியின் 12கி.மீ சுற்றுவட்ட பிரதேச மக்கள் நன்மை அடைவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (17)

## தாயும் மகளும் படுகொலை இறப்பர் தோட்டத்தில் சடலங்கள்

(கொழும்பு)

கஹவத்த பகுதியிலுள்ள ஓபாத்த இறப்பர் தோட்டத்திலிருந்து கொலை செய்யப்பட்ட நிலையில் பாடசாலை மாணவியொருவரினதும் அவரது தாயாரினதும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கஹவத்தயிலுள்ள வியார மாவத்தையைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவியான கவிந்திய சத்துரங்கனி செல்லஹேவா (வயது-17) மற்றும் தாயாரான பி.நயனா நில்மினி (வயது - 51) ஆகியோரது சடலங்களே மீட்கப்பட்டுள்ளன. பொதுமக்களிடமிருந்து கிடைத்ததகவலையடுத்து கடந்த வியாழக்கிழமை காலையில் பாடசாலை மாணவியின் சடலமும் மாலையில் தாயாரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளதாகவும் இச்சடலங்களை இரத்தினபுரி வைத்திய சாலையில் உறவினர்கள் அடையாளம் காட்டியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு அடையாள அட்டை வழங்கினார் அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுடன் நல்லுறவைப் பேணும் அதேவேளை சட்டம் ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதனூடாகவே சிறந்த சேவையை வழங்க முடியும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்திற்கு வருகை தந்திருந்த யாழ்.மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களுக்கு நண்பர்களாக விளங்கும் அதேவேளை பொலிஸாருடன் சட்டம், ஒழுங்குக்கு கட்டுப்பட்டு நடந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் மக்களுக்கான சேவைகளைத் திருப்திகரமாகச் செயய முடியும் என்பதுடன், தொழில் என்பதற்கு மேலாக மக்கள் நலன்களில் அதிகளவான அக்கறை செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் என்ற வகையில் நீங்கள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பாக தனது கவனத்திற்கு தெரியப்படுத்துமாறும் தெரிவித்த அமைச்சர், ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் தாம் கவனம் செலுத்துவதாகவும் உறுதிமொழி வழங்கினார்.

முச்சக்கர வண்டி சாரதிகளுக்கான அடையாள அட்டைகள் அமைச்சராலும், பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திரன் உள்ளிட்டவர்களாலும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பால் உற்பத்திப் பண்ணையில் பத்தாயிரம் 'யூஸ்' பாழாகியது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள பால் உற்பத்தப் பண்ணையில் பசுப்பாலினால் செய்யப்பட்ட 10000 பைக்கற் யூஸ் பழுதடைந்த நிலையில் அண்மையில் அப்புறப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, இப் பண்ணையில் தொழில்நுட்பத் தகைமையுள்ள ஊழியர்கள் இல்லாத நிலையில் அனுபவ அறிவை வைத்துக் கொண்டு பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் அண்மையில் பொறுப்பான பணியாளர்கள் சுகயீனம் காரணமாக இரண்டு வாரங்களுக்கு மேல் கடமைக்குச் சமுகமளிக்காத நிலையில், உற்பத்திப் பகுதிக்கு மேலதிகமாக வந்த பாலைச் சேகரித்து வைக்க எந்த வாய்ப்பும் இல்லாத காரணத்தால் இருக்கும் பணியாளர்களைக் கொண்டு முடிந்தவரை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் தொழில்நுட்பக் குறைபாடு காரணமாக சந்தைப்படுத்த முடியாத நிலையில் 2500 இற்கும் அதிகமான யூஸ் பைக்கற்றுக்கள் அழிக்கப்பட்டு மீள் உற்பத்திக்கு முயற்சி செய்யப்பட்டது. இம்முயற்சியும் வெற்றியளிக்காத நிலையில் இக் கலவை பாவனைக்கு உதவதாது என ஊற்றப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இந்நிலையில் இங்கு மேலும் 7000 இற்கும் அதிகமான பைக்கற் யூஸ் காலாவதியாகிப் போன நிலையிலும், தொழில்நுட்பக் குறைபாடுகள் காரணமாகவும், மேலதிக பொருட்கள் பேணிப் பாதுகாக்க குளிரூட்டிகள் இல்லாத காரணத்தினாலும் பழுதடைந்த காரணத்தால் அண்மையில் இவை அழித்தொழிக்கப்பட்டது. ஒரு பைக்கற் யூஸின் சில்லறை விலை 10 ரூபா என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இச்சங்கத்துக்குப் பொருத்தமான தகைமைகளை உள்ளடக்கிய பணியாளர் தொகுதியை வரையறுத்துக் கொள்வதற்கும், அதற்கான ஆளணி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் கூட்டுறவுத் திணைக்களத்துடன் எடுத்த முயற்சிகள் இன்னமும் சீர்செய்யப்படாமல் உள்ளதால் இந்நிலை அடிக்கடி ஏற்படுவதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்குப் பலகோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படுகின்ற போதிலும், அதன் பெறுபேறுகள் இப்படியே பயனற்றுப் போகிறது என பொதுமகன ஒருவர் கவலை தெரிவித்தார். (120)

# வானிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு இரண்டு புதிய கட்டடங்கள் அமைப்பு

திருநெல்வேலியில் அமைந்துள்ள வளிமண்டல ஆராய்ச்சி நிலையத்துக்கு புதிய இரண்டு கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக அதன் தற்போதைய பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்தார்.

இந்த இரண்டு கட்டடங்களில் ஒன்று ஆய்வு மையத்தின் செயற்பாட்டுக்குரிய வசதிகளுடன் காரியாலயத்தையும் கொண்டிருக்கும். 38 அடி நீளம் 31 அகலத்தைக் கொண்ட இந்தக் கட்டடத்திற்கான ஆறு மில்லியன் ரூபாவை நிக்கொட் நிறுவனம் வழங்கியிருக்கிறது.

வதிவிட விடுதிக்கு 8.8 மில்லியன் நிதியை வளிமண்டலத் திணைக்களம் வழங்கியுள்ளது. 50 அடி, 30 அடி நீள அகலமானதாக இருக்கும். இந்தக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் தற்போது 90 வீதம் நிறைவடைந்துள்ளன. கூரை வேலைகளில் காணப்படும் கால தாமதம் காரணமாக இந்த வருடம் ஏப்ரல் மாதமளவில் இந்தக் கட்டடங்கள் வைபவ ரீதியாகத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (23)

## மகாகும்பாபிஷேகம்

யாழ்.கீரிமலை திருவருள் மிகு நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரஸ்வாமி ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.30 வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. மகா கும்பாபிஷேகத்தை முணனிட்டு இன்று 10 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து 15 தினங்கள் அலங்கார உற்சவம் இடம் பெறவுள்ளதுடன், எதிர்வரும் 21 ஆம் திகதி மகா சிவராத்திரி பூசையும் இடம் பெறவுள்ளது.

# மாகாணமட்ட கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை

(பருத்தித்துறை)

தரம் 6 மாணவர்களுக்கான மாகாணமட்ட தமிழ் மொழி மூலமான கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை -2012 இல் நடத்துவதற்கு வடமாகாண சபையின் கல்வித் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை தொடர்பான கடிதம் ஒன்றையும் மாணவர்களுக்கான அனுமதியட்டைகளையும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இத்தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கும், வவுனியா சி.சி.ரி. எம்.எஸ்.பாடசாலை மண்படத்தில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாணவர்களுக்கும் இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11 மணி வரை கணிதமும், 11.30 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை விஞ்ஞானமும் நடைபெறவிருப்பதால் மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் வழங்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடமராட்சி கல்வி வலயத்தில் இருந்து மாகாணமட்ட தமிழ்மொழி மூலமான கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட 15 மாணவர்களுக்கான அனுமதியட்டைகள் கல்வி வலயத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாகவும், அவற்றை சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மேற்படி வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர் விபரம் வருமாறு-

ராஜகுமார் விவேகன் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி, புவனேந்திரராஜ் அட்சயா - மேலைப்புலோலி சிவப்பிரகாச வித்தி, ரங்கநாதன் சுகந்தன் - தும்பளை சிவப்பிரகாச ம.வி, யேசுதாஸ் சாம்பவி - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி, ரவீந்திரன் அக்சியா - கரவெட்டி மாணிக் கவாசகர் வித்தி, ரங்கநாதன் வாகீஷ் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, மனோகரன் துஷ்யந் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி, புவனேந்திர ராசா பிருந்துதி - விக்னேஸ்வரா வித்தி, ராசலிங்கம் துஷாரகன் - சித்தி விநாயகர் வித்தி, அல்டன் பிரிய தர்ஷா - சென்.தோமஸ் ஆர்.சி. மகளிர் கல்லூரி, ஜெய ரங்கிதன் துருஷன் - மேலைப் புலோலி சிவப்பிரகாச வித்தி, ஜெயச்சந்திரன் கஜீவன் - துன்னாலை காசிநாதர் வித்தி, கோபாலகிருசன் கிருசாந்- தும்பளை சிவப்பிரகாச ம.வி, சிவபாதராஜ் பிரியவர்ணன் - வல்வை மகளிர் ம.வி, சிறிகாந்தன் சரண்யா - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி. (109)

# சிறுத்தீவு கெபித்திருநாள் எப்போது?

(குருநகர்)

மூன்று தசாப்த காலங்களாக கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் யாழ்.சிறுத்தீவு லூர்து அன்னையின் கெபித் திருநாள் எப்போது நடைபெறும் என கத்தோலிக்க மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ்.மறைமாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியான சிறுத்தீவு, குடாக்கடல் நீரேரியில் குருநகருக்கும், மண்டைதீவுக்கும் இடையே சதுப்பு நிலமாக அமைந்துள்ளது.

1992 ஆம் ஆண்டு படையினர் மண்டைதீவில் நிலைகொண்டு இருந்த காலத்தில் இருந்து சிறுத்தீவு லூர்து அன்னையின் கெபித் திருநாள் நடைபெறவில்லை.

அங்கே அமைந்திருந்த கெபியும் அனர்த்தங்களால் அழிவுற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை மிதிவெடிகள் விதைக்கப்பட்டுள்ளதால் மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

இப்போது மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆயினும் இம்மாதம் 11ஆம் திகதி நடைபெறவேண்டிய திருநாள் நடைபெறுமா என்றும் கேள்வி எழுந்துள்ளது. (68)






மேலைப்புலோலி சைவப்பிரகாச மகா வித்தியாலய அதிபராக இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர் கே.எம்.கனகலிங்கத்திற்கு வித்தியாலய சமூகத்தால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவிலும், அவர் சிறந்த அதிபருக்குமான "பிரதீபா பிரபா" விருதைப் பெற்றமையைப் பாராட்டி நடத்தப்பட்ட விழாவிலும் அவரும் அவரது பாரியார் திருமதி நந்தினியும் புதிய அதிபர் பி.பொன்னம்பலம் தலைமையில் ஊர்வலமாக இசை முழங்க அழைத்துவரப்படுவதையும், வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைச் செயலாளர் வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன் உரையாற்றுவதையும் காணலாம். (01)

# புகையிலைச் செய்கை தீவகத்தில் பின்னடைவு

(மண்டைதீவு)

தீவுப்பகுதியில் இவ்வருடம் புகையிலைச் செய்கையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மழைவீழ்ச்சி பருவ நிலைக்கு ஏற்பமழை பெய்யாததுடன் நடுகை வழமையைவிட தாமதமாக மேற்கொள்ளப்பட்டமையாலேயே செய்கையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட புகையிலைப் பயிர்கள் குருத்து முறிக்கும் தைமாதத்தில் பாத்திகட்டாத நிலையில் மண்டைதீவு விவசாயிகளின் புகையிலைத் தோட்டங்கள் காணப்படுகின்றன. அத்துடன் நீர்ப் பாய்ச்சல் காலமும் போயுள்ள நிலையில் பல தோட்டங்கள் தற்பொழுது ஊத்து தண்ணீர் பருவத்திலேயே உள்ளன.

இதனால் கடந்த வருடம் பயிரிடப்பட்ட புகையிலை சுருட்டுக்கு பயன்படுத்தப்படாத இப்புகையிலைப் பாடங்களின் விலை வீழ்ச்சியடைந்ததுடன் தேக்க நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் இலங்கையில் சுருட்டுக்கும் கேள்வி குறைந்துள்ள நிலையில் சுருட்டுப்புகையிலைக்கும் இதனால் பின்னடைவு ஏற்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (23)

# நிறுவுனர் தினமும் சஞ்சிகை வெளியீடும்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுனர் நாளும், தாமோதரன் சஞ்சிகை வெளியீடும் இன்று 05.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அதிபர் அ.கையிலாயபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக வரலாறுத்துறைத் தலைவர் பேராசிரியர். ப.புஸ்பரட்ணமும், தாமோதரன் சஞ்சிகைக்கான வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரனும் நிகழ்த்தவுள்ளனர்.

# முறையான திட்டத்துடனான தொழில் முழுமையான வெற்றியைத் தரும்



(கிளிநொச்சி)

எந்த தொழிலில் ஈடுபட்டாலும் அதற்கே உரிய முறையான திட்டங்களோடு ஈடுபடுகின்ற போது அதிலிருந்து முழுமையான பயனைப் பெறமுடியும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் அங்கத்துவர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நடவடிக்கையின் பயனாக 38 இலட்சம் இறால் குஞ்சுகள் அண்மையில் சுண்டிக்குளம் உள்ளிட்ட அதனோடிணைந்த கடல் நீரேரியில் விடப்பட்டுள்ளன. அமைச்சரின் வேண்டுகோளுக்கமைய வடமாகாண ஆளுநர் வட மாகாண நிதியிலிருந்து இத் திட்டத்திற்கு 13.65 மில்லியன்களை வழங்கியிருந்தார்.

எனவேதான் இத்திட்டம் அதன் நோக்கத்தை அடைந்து வெற்றி பெற வேண்டுமானால் இறால் தொழிலில் ஈடுபடுகின்ற 11 சங்கங்களைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களும் தங்களுடைய பூரண ஒத்துழைப்புடன் இம்முறை இத்திட்டம் முழுமையான வெற்றி பெறும் பட்சத்தில் எதிர்காலத்தில் தொடர்ந்தும் இத் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

பெருமளவு நிதிச் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத் திட்டத்தின் பயன் இதனை நம்பியுள்ள 1300 தொழிலாளர் குடும்பங்களையும் சென்றடைய வேண்டும். கடந்த காலங்களில் இறால் தொழிலில் ஈடுபட்டு, பெற்ற வருமானத்தை விட இத் திட்டத்தின் மூலம் அதிகளவு வருமானத்தைப் பெற முடியும். அதற்கு தொழிலாளர்கள் அனைவரும் தங்களின் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் சங்கத்தின் சமாச பொது முகாமையாளர் கணேசபிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், கடல் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி, கூட்டுறவு உதவி ஆணையாளர் தவராஜா, கண்டாவளை பிரதேச செயலாளர் சத்தியசீலன், நீரியல் வள ஆராய்ச்சி நிலைய மாவட்ட அதிகாரி சலீம், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை கரம்பொன் ஸ்ரீஞானவைரவர் சன சமூக நிலையத்தின் ஆண்டு பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் சன சமூக நிலைத்தலைவர் ஓ.வெற்றிவேல் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஓ. வெற்றிவேல் தலைவராகவும், கி.புவி செயலாளராகவும், ஹ.உஷாந்தினி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (65)

□ □ □

சாவகச்சேரி ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

அகிலாண்டம் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ம. விவேகானந்தன் தலைவராகவும், திருமதி வை. பரிமளம் உப தலைவராகவும், திருமதி, ப. ஸ்ரீகாந்தரூபி பொருளாளராகவும், திருமதி து. சுஜீதா செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 3 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# தமிழ் மொழித்தினப் போட்டிகள்; விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கவும்

(பருத்தித்துறை)

2012 ஆம் ஆண்டு தமிழ் மொழித்தினப்போட்டிகளில் பங்குபற்றும் வடமராட்சி வலய மாணவர்கள் போட்டிகளுக்குரிய விணணப்பபடிவங்களை உரிய முறையில் அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சி. நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதன்படி நாட்டுக்கூத்துப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அபிவிருத்திப் பிரிவுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

மேலும் எழுத்தாக்கப் போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடத்தி முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களின் விபரங்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது கோட்டக்கல்விப் பணிப்பாளரிடம் அனுப்பிவைக்கவேண்டும்.

இதைவிட மாகாணமட்ட தமிழமொழித்தினத்தை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள கவிந்தமிழ் சஞ்சிகைக்கான ஆக்கங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வவ் வலயக் கல்வி அபிவிருத்திப் பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (109)

# போக்குவரத்தில் சிரமம்; நோயாளர் அசௌகரியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொதுமருத்துவமனையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திற்கும் மருத்துவமனைக்கும் இடையிலான தூரம் மிக நீண்ட தூரமாகக்காணப்படுவதுடன் இதனால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி வருவதாகத் தெரிவிக்கின்றனர். இதைவிட தூர இடங்களிலிருந்து வருகின்ற நோயாளர்கள் தமக்குரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக மிக நீண்ட தூரத்திலிருந்து வருபவர்கள் சரியான போக்குவரத்து வசதி இன்மையால் உரிய நேரத்துக்குச் சென்று சிகிச்சையைப் பெறமுடியாதுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

## முரசின் இன்றைய பலன்

(05.02.2012 -ஞாயிற்றுக்கிழமை)

கர வருஷம் தை மாதம் 22 ஆம் திகதி. திரயோதசி பின் இரவு 5.10 வரை. நட்சத்திரம் திருவாதிரை பிற்பகல் 1.17 வரை. சித்தியோகம் பிரதோஷவிரதம், இராகுகாலம் 5.05 - 6.35 வரை. சுப நேரம் 9.35 - 11.05 வரை. எம கண்டம் 12.35 - 2.05 வரை. குளிகைகாலம் 3.35 - 5.05 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | திருப்திகரம், மருத்துவச்செலவு, கருத்து வேறுபாடு, உறவினரால் இலாபம். |
| ரிஷபம் | பொருள்வரவு, பிரயாணம், திருமணப்பேச்சு, முன்னேற்றம். |
| மிதுனம் | சஞ்சலம், பெரியோர் உதவி, பொருளாதாரத்தில் திருப்தி, புதிய ஒப்பந்தம். |
| கடகம் | சுப நிகழ்ச்சி, மனச்சஞ்சலம், வேலை தேடல், புத்திரப்பேறு. |
| சிம்மம் | முற்பகல் நன்று, முயற்சியில் வெற்றி, ஆன்மீக ஈடுபாடு , அதிர்ஷ்டம். |
| கன்னி | புகழ்ச்சி, மனதில் சஞ்சலம், தொழிலில் பின்னடைவு, குடும்ப அதிருப்தி. |
| துலாம் | சிறப்பான வாழ்வு, பணவரவில் சிக்கல்கள், கடன்படல், உதவிகள் தாமமதம். |
| விருச்சிகம் | புதுமுயற்சி தவிர்க்கவும், நற்செய்தி, சகோதரர் உதவி, மகிழ்ச்சி. |
| தனுசு | கூட்டுமுயற்சி இலாபம், பிரயாணங்கள், அதிக செலவு, சீரானவருவாய். |
| மகரம் | எதிர்பாராததொல்லை, உற்சாகம், வெற்றிகள் கிட்டும், இன்பமும் துன்பமும். |
| கும்பம் | தொழில் வெற்றி, குடும்ப அனுசரணை, சுபகாரியம், திருமண முயற்சி. |
| மீனம் | உற்சாகம்,மேல் அதிகாரிகள் ஒத்துழைப்பு, புதிய கடன்கள், சுபகாரியம். |

# பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இளைஞர் மாநாட்டை முன்னிட்டு மாவட்ட சம்மேளனம் கடந்த 30ஆம் திகதி நடாத்தவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நிகழ்வானது தவிர்க்க முடியாத காரணங்களினால் 25.02.2012 அன்று பிற்போடப்பட்டுள்ளதாகவும் அதிர்ஷ்டலாபச் சீட்டின் முடிவுத்திகதி 24.02.2012 ஆகும் எனவும் இளைஞர்கழக மாவட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.

# காலநிலையில் மாற்றம் ஏப்ரல் மாதம் வரை இல்லை

(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் ஏப்ரல் மாதம் வரை காலநிலையில் மாற்றங்கள் இருக்காது அதனால் பெரிய அளவில் மழை பெய்யும் சாத்தியம் இல்லை என வழிமண்டல ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

யாழ். குடா நாட்டில் எதிர் வரும் ஏப்ரல் மாதம் வரை பெரியளவில் மழை பெய்வதற்கு வாய்ப்பு இல்லை. வழி மண்டல நிலையில் பெரியமாற்றங்கள் ஏற்படும் நிலை அவதானிக்கப்படாததால், மழை வீழ்ச்சி, வெப்பநிலை, சார் ஈரப்பதன் என்பவற்றில் சிறு வேறுபாடுகளே காணப்படும்.

அண்மையில் பெய்த மழைபோல் ஒன்று இரண்டு மில்லி மீற்றர் அளவான மழை ஏற்படலாமே தவிர தொடர்ச்சியான அதிக் அளவான பெரிய மழை பெய்யும் சூழ்நிலை இல்லையென வழி மண்டல ஆய்வு நிலை அதிகாரி தெரிவித்தார். (23)

# வெளிப்படையான சுயவிமர்சனமே சரியான தீர்வுக்கு வழிசமைக்கும்

-சாலையூரான்-

நிரந்தரத் தீர்வுக்கான பேச்சை நோக்கிய முன்னெடுப்பில் அரசும் தமிழ் தரப்பும் தத்தமது தளங்களில் எதிர் கொள்ளும் சங்கடங்களை பரஸ்பரம் புரிந்துகொள்ள உதவும் வகையில் ஊடகங்கள் தமது செய்திகளை வெளியிடுவதாகத் தெரியவில்லை.

உண்மையில் நடைபெறும் பேச்சுக்களில் பங்குபற்றும் இருதரப்பினரும் பரஸ்பரம் தனியாகவும் கூட்டாகவும் புரிதல்களை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு சூழலிலேயே பேச்சுக்களில் சாதகமான ஒரு கட்டத்தை நோக்கி நகர முடியும்.

இதுவிடயத்தில் தமிழ்த் தரப்பின் சார்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பற்றி உண்மையாக தென்னிலங்கை கட்சிகளும் அங்கு தொழிற்படும் ஊடகங்களும் எவ்வாறு நோக்குகின்றன என்பது இவ்விடத்தில் கவனத்திற்குரிய விடயமாகும்.


இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம், மோதல்கள் உக்கிரம் பெற்ற காலத்தில் இருந்து புலிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேணிவந்த உறவுகள், புலிகளின் மறைவுக்குப் பின்னர் அரசு பற்றி நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் கூறிவரும் கருத்துக்கள் என்பன யாவும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளால் எவ்வாறு புரிந்து கொள்ளப்படும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உணர்ந்து கொண்டு செயற்படுவது அவசியம்.

இதன் மூலமே முன்னர் புலிகளை தென்னிலங்கை தரப்புக்கள் நோக்கிய முறைமையிலிருந்து விடுபட்டு விட்டுக் கொடுப்புடன் அரசு எதிர்கொள்ளும் நியாயமான சங்கடங்களையும் புரிந்து செயற்படும் நேச அணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நோக்கும் நிலை உருவாகும்.

இதனூடாகவே தீர்வு நோக்கிய முயற்சிகளும் அவ்வாறே எட்டப்படும் தீர்வுகளும் தமிழ் மக்களுக்கு சாதகமாக அமைவதற்கான சூழலை உருவாக்க முடியும்.

ஆனால், பேச்சுக்களில் ஆர்வமாக இருப்பதாக காட்டிக் கொள்ளும் அதேவேளை, அரசு மீது குற்றம் சாட்டிக் கொண்டு பேச்சுக்களை இழுத்தடித்து செல்லும் விதம் புலிகள் கடந்தகால போர்நிறுத்தங்களை அடுத்த உக்கிர மோதலுக்கு தயார்படுத்தியதை ஞாபகமூட்டுவதாகவே இருக்கிறது.

அரசுக்கெதிராக யுத்தம் நிகழ்த்திய 30 ஆண்டுகாலத்தில் அரசுடன் தீர்வுப் பேச்சுக்காக கிடைத்த அனைத்து யுத்த நிறுத்த வாய்ப்புக்களையும் அரசுடன் பேசிப் பயனில்லை போரை முன்னெடுப்பதே ஒரே வழியென மக்களிடம் நியாயப்படுத்துவதற்கான களமாகவே புலிகள் பயன்படுத்திக் கொண்டனர்.



தற்போது வெளிச் சக்திகளின் தலையீட்டைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொள்ளும் முயற்சிகள் மறுபுறத்தே தென்னிலங்கை ஊடகங்கள் மற்றும் அங்குள்ள அரசியல் கட்சிகளால் அரச விரோத அல்லது தேசவிரோத செயற்பாடாக கருதும் ஆபத்தான சூழலையே தோற்றுவித்திருப்பதாக தெரிகிறது.

இவ்வாறானதொரு நிலைமை தென்னிலங்கை அரசியற் தரப்புக்களுக்கு மீண்டும் புலிகளின் பேச்சு வார்த்தையை ஞாபகமூட்டுவதாகவே இருக்கும்.

தற்போது தீர்வுப் பேச்சுக்கள் வடக்கு மாகாண சபைக்கான அதிகாரங்கள் பற்றிய பிரச்சினைகளில் வந்து நிற்கின்றன.

இப்பேச்சை ஆரோக்கியமாக தொடர்வதற்கு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கிடைத்த வடக்கு கிழக்கு மாகாணசபையை, புலிகள் விரும்பினர் என்பதற்காக அதனைச் செயலிழக்கச் செய்ய, தாம் பயன்படுத்தப்பட்டதை இந்த இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒப்புக் கொள்வது அவசியம்.

அதுமட்டுமன்றி இலங்கை - இந்திய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 20 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இணைப்பதற்கான பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு கிடைத்த வாய்ப்பை யாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இக்காலப்பகுதியில் சரியாக பயன்படுத்தி வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இணைத்திருக்கலாம்.

புலிகளின் விருப்பத்திற்காக அவ்வாறான முயற்சியை வேண்டுமென்றே தவிர்த்ததன் மூலம் அதன் பின்னரான கோர யுத்தத்தில் எம் மக்கள் எதிர்கொண்ட பாரிய உயிர், உடமை இழப்புக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்பதை இவ்விடத்தில் கூறியாக வேண்டும்.

இவையாவும் புலிகளின் தமிழ் தேசியத்தின் பெயரால் தமது நாடாளுமன்றக் கதிரைக்கான வேட்கையின் பெயரால் எம்மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதியாகும்.

இச்சம்பவங்கள் யாவற்றையும் சிங்கள மக்களும், சிங்கள தேசியவாதிகளும் நன்கறிவர் என்பதை நாம் மனதிருத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இவ்வாறான தவறுகளுக்கு பின்னர் தம்மை தமிழ்த் தரப்பின் தலைவர்களாக அரசு மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டுமென எதிர்பார்ப்பார்களாயின் நாட்டு மக்களிடம் தம் கடந்த காலம் பற்றிய தவறை முதலில் மக்களிடம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

அத்தகைய ஒப்புதலொன்று தேசத்தின் முன் வைக்கப்படும் முறைமையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சாதகமாக அரசு நோக்கும் நிலைமையும் இருக்கிறது என்பதையும் இவ்விடத்தில் கூறியாக வேண்டும்.


மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதாக கூறி கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் புலிகள் நிகழ்த்திய கோரத்தாக்குதல்கள் தென்னிலங்கை மக்கள் மனதில் மாறா வடுக்களாக இப்போதும் இருந்து கொண்டேயிருக்கின்றன.

இந்த மனவடுக்களை அம் மக்களின் மனத்திலிருந்து அகற்றுவதற்கான கடப்பாடு தம்மை தமிழ் மக்களின் தலைவர்களாக கூறிக் கொண்டு தீர்வுப் பேச்சுக்களை முன்னெடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடத்திலேயே கணிசமாக இருக்கிறது.

இதனைவிட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், புலிகளால் அரசியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டவர்கள் என்கிற ஒரு மனப் பதிவும் அரசுத் தரப்பிலும் அவ்வாறே தென்னிலங்கை கட்சிகளிடம் இருப்பதையும் அவர்கள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

புலிகளின் சூழலில் தவறுகளுக்காக நிர்ப்பந்திக்கப்பட்ட நிலைமைகளை விளக்கி தமது சுயவிமர்சனத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முறையாக முன்வைக்கின்ற ஒரு நிலைமையின் ஊடாகவே எட்டப்போகும் அரசியல் தீர்வு தென்னிலங்கை மக்களால் உவந்து ஏற்றுக் கொள்ளப்படும் சூழலை உருவாக்க முடியும்.

## தவளையைக் கண்டு ஓடும் பாம்பு



தவளைகள் பாம்பின் பிரதான உணவு, பிரிய மான்தும்கூட. ஆனாலும் வடஅமெரிக்காவின் காட்டுப் பகுதியில் வாழும் டார்ட் பாய்வின் என்ற வகை தவளையைக் கண்டால் மட்டும் பாம்புகள் ஒதுங்கிப் போய்விடுகின்றன. காரணம் அது விஷத்தவளை.


பச்சை நிறத்தில் சிறிய அளவே இருக்கும் இந்தத் தவளையின் உடம்பிலிருந்து எடுக்கப்படும் இரண்டு துளி விஷம் ஆயிரம் பேரின் உயிரைக் குடித்துவிடும். இந்தத் தவளையின் விஷத்தை ஆதிவாசிகள் அம்புகளில் பூசி எதிரிகளைத் தாக்குகிறார்கள்.

# ஐன்ஸ்டீன் கோட்பாடு ஆட்டம் காண்கிறதா?

அறிவியல் என்பதே பொய். நேற்று ஒன்றை உண்மையென்று அடித்துச் சொன்ன அறிவியல், இன்று அதைத் தவறு என்று சொல்கிறது. அப்படியானால் அறிவியலறிஞர்கள் சொல்வதை எப்படி உண்மை என்று நம்புவது? என்று கேட்பவர்கள் இருக்கிறார்கள்.

அறிவு என்பது வளர்ந்து கொண்டேயிருப்பது. மாறிக கொண்டே இருப்பது. அறிவியல் உண்மைகளும் அப்படித்தான். இதை ஏற்றுக் கொண்டால் அறிவியல் என்பதே பொய் என்று அவர்கள் சொல்லமாட்டார்கள்.

ஐன்ஸ்டீன் என்ற உடனேயே நமக்கு நினைவுக்கு வருவது அணுகுண்டுகள்தாம். அதையும் தாண்டி ஐன்ஸ்டீனின் அறிவியல் கோட்பாடுகள் மிக மிக முக்கிய



மானவை. குறிப்பாக, அவருடைய சிறப்புச் சார்பியல் தத்துவம் அறிவியல் உலகில் மிக மிக முக்கியமானது. அந்தச் சிறப்புச் சார்பியல் தத்துவம் இப்போது ஆட்டம காணத் தொடங்கியுள்ளது. உலகில் புதிதாகக் கண்டுபிடிக கப்பட்ட ஒரு கண்டுபிடிப்பே இதற்குக் காரணம்.

யாழ்ப்பாணம் எந்தத் திசையில் இருக்கிறது? என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்? கொழும்பிற்கு வடக்கே, இந்தியாவுக்குத் தெற்கே, முல்லைத்தீவுக்கு மேற்கே என்றுதான் சொல்வீர்கள். இன்று என்பது நேற்றிலிருந்து பார்க்கும்போது நாளையாக இருந்தது. நாளையில் இருந்து பார்க்கும்போது நேற்றாக இருக்கும்.

நடப்பதை விட சைக்கிளில் செல்வது வேகம். சைக்கிளைவிட காரில் செல்வது வேகம். காரை விட விமானத்தில் செல்வது வேகம். அப்படியானால் வேகம் என்று சொல்லும் போது எதைவிட வேகம்? என்ற கேள்வி வந்துவிடுகிறது. இப்படி எல்லா விஷயங்களும் ஒன்றையொன்று சார்ந்துதான் இருக்கிறது. அப்படி ஒப்பிட்டுத்தான் நாம் பார்க்க முடியும். இதுதான் சார்பியல் தத்துவத்தின் அடிப்படை.

ஆனால் ஐன்ஸ்டீனின் சிறப்புச் சார்பியல் தத்துவம் வித்தியாசமானது. அது பிறவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத ஒளியின் திசை வேகத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒளியின் வேகம் சார்பற்றது என்பதுதான் அவருடைய கோட்பாட்டின் அடிப்படை.

வெற்றிடத்தில் ஒளியின் திசை வேகம் விநாடிக்கு 29,97,92, 458 மீற்றர். நாம் இதுவரை "அறிந்த" பிரபஞ்சத்தில் இதைவிட மிஞ்சிய வேகம் என்று எதுவுமில்லை என்ற அடிப்படையில்தான் ஐன்ஸ்டீன் தனது சிறப்புச் சார்பியல் தத்துவத்தை உருவாக்கினார்.

ஐன்ஸ்டீனின் புகழ்பெற்ற $c = mc^2$ என்ற ஆற்றலைப் பற்றிய சமன்பாடும் ஒளியின் இந்த திசை வேகத்தை அடிப்படையாகக் கொண்டதே.

ஐன்ஸ்டீன் சொன்னது மாதிரி ஒளியின் திசை வேகம்தான் உலகிலேயே அதிகபட்ச வேகம் என்றால் இந்தச் சமன்பாட்டில் மாறுதல் எதுவும் வந்துவிடாது. ஆனால் ஒளியை விட அதிகபட்ச வேகம் உள்ள வேறு ஒரு பொருள் இருக்கிறது என்று புதிதாகக் கண்டுபிடித்துவிட்டால், இந்தச் சமன்பாட்டின் அடிப்படையே நிலநடுக்கம் வந்ததுபோல் ஆட்டம் காணத் தொடங்கிவிடும்.

அப்படி ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டார்கள் கடந்த செப்டம்பர் மாதத்தில்.

ஜெனிவாவில் உள்ள, 20 நாடுகள் ஒன்றிணைந்த ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனம் கடந்த செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி ஓர் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் ஒளியை விட திசை வேகம் உள்ள பொருளாக நியூட்ரினோ எனும் மிக மிக எடை குறைந்த அணுத்துகளைக் குறிப்பிட்டது.

இந்த அணுத்துகள் ஏதோ இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது என்று நினைத்துவிடாதீர்கள். இதை 1936 ஆம் ஆண்டே வுல்ஃப்காங் பெய்லி என்ற அறிவியலறிஞர் கண்டுபிடித்துவிட்டார். அணுக்கருவினை நடக்கும்போது அதிக வெப்பநிலையில் நியூட்ரினோ அணுத்துகள் உருவாகிறது. உதாரணமாக 4 ஆயிரம் டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் சூரியனில் ஐதரசனும், நைதரசனும் சேரும்போது, ஹீலியமும் நியூட்ரினோவும் வெளிப்படுகின்றன.

இந்த நியூட்ரினோ அணுத்துகள் ஒளியைவிட அதிக வேகமாகச் செல்லக் கூடியது என்பதைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

இதிலிருந்து ஐன்ஸ்டீனின் கோட்பாடு இனியும் செல்லுபடியாகுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

நியூட்டனின் இயக்கவிதிகளில் இருந்து மாறுபட்டவை ஐன்ஸ்டீனின் கோட்பாடுகள். என்றாலும், நமது அன்றாட வாழ்வின் அனைத்து நிகழ்வுகளிலும் நாம் பயன்படுத்தும் சாதாரண வேகத்தில் இன்றும் செல்லுபடியாகக் கூடியவை நியூட்டனின் இயக்கவிதிகள். அதிக வேகங்களில்தான் அவை செல்லுபடியாகாமல் போய்விடுகின்றன.

அதுபோல ஐன்ஸ்டீனின் விதிகளில் ஒளியின் திசை வேகம் தொடர்பான சிலவற்றை மட்டும் நிராகரித்துவிட்டு அறிவியல் மேலும் வளரவே, நியூட்ரினோ அணுத்துகள் ஒளியை விட அதிக திசை வேகம் கொண்டது என்ற கண்டுபிடிப்பும் உதவும்.

-ந. ஜீவா-

# 10 ஆண்டுகளில் 20 ஆயிரம் புதிய நகரங்கள்



சீனாவின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பொருட்கள் தயாராகின்றன என்றாலும், இரண்டு, மூன்று மாநிலங்கள் மட்டும் பல பொருட்களின் உற்பத்தித் தலங்களாகத் திகழ்கின்றன. அவற்றுள் ஒன்று க்வாண்டாங். சீனாவின் மொத்த உற்பத்தியில் 30 சதவிகிதப் பொருட்கள் இந்த மாநிலத்தில்தான் தயாராகின்றன. இங்கு தயாராகும் வெடிகள், வாணவேடிக்கை வகைகள் பல்வேறு நாடுகளுக்கு விற்கப்படுகின்றன.

குறிப்பாக, பெரும்பாலான நாடுகள், சீனாவில் இருந்துதான் வாண வேடிக்கை வகைகளை இறக்குமதி செய்கிறார்கள். சீனாவில் எவ்வளவு குறைவான விலைக்குப் பொருட்கள் கிடைக்கின்றன என்பதற்கு, அங்கு தயாராகும் வாணவேடிக்கை வகைகள் ஒரு உதாரணம்.

சீனாவில் இருந்து வாணவேடிக்கை வகைகளை இறக்குமதி செய்யும் வியாபாரிகள், தங்கள் நாட்டில் அதை விற்பனை செய்யும்போது 200 முதல் 600 சதவிகிதம் வரை இலாபம் ஈட்டுகிறார்கள்.

இதேபோல மற்றொரு பொருளை உதாரணமாகச் சொல்வதானால், சீனாவில் தயாராகும் கூலிங்க்ளாஸ் கள் பிரசித்தி பெற்றவை. அங்கு அதன் விலை ஒரு டொலர். சீனாவில் தயாரான இந்த கூலிங்க்ளாஸ் அமெரிக்காவில் 35 டொலருக்கு விற்கப்படுகிறது. ஆனால், அமெரிக்கர்கள் இதை குறைந்த விலை என்றே கருதுகிறார்கள்.

சீனாவில் இருந்து ஏற்றுமதி அதிகமாக இருப் பதற்கு, அவர்கள் அதிக இலாபத்தை எதிர்பார்ப் பதில்லை என்பதும் முக்கிய காரணமாகும். பெரும்பாலான பொருடகளை 2 முதல் 3 சதவிகித இலாபத்துக் குத்தான் சீனா விற்கிறது.

சட்டைப் பொத்தான் முதல் எலெக்ட்ரோனிக் சாதனங்கள் வரை சீனாவில் இருந்து ஏற்றுமதியா கின்றன. மின்சார உற்பத்திக்குத் தேவையான உபகரணங்கள், இரும்பு மற்றும் எ்.கு, மருத்துவ உபகர ணங்கள், கப்பல் கட்டுவதற்கான தளவாடங்கள், ஆயத்த ஆடைகள், இரசாயனப் பொருட்கள்.... என்று பல வகையானவை சீனாவில் இருந்து பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சீனப் பொருட்களை அதிகமாக வாங்கும் நாடு களை வரிசைப்படுத்திச் சொல்வதானால் அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா, ஜேர்மனி, நெதர்லாந்து, இந்தியா, பிரிட்டன், சிங்கப்பூர், இத்தாலி ஆகியன வாகும். ஆக, வளர்ந்த நாடுகள் முதல் வளருகின்ற நாடுகள் வரை - அமெரிக்கா முதல் ஆபிரிக்கா வரை தொழில் ரீதியாக சீனா பரவியுள்ளது என்று சொல்லலாம்.

தொழில் துறையின் வளர்ச்சிக்கு நகர்ப்புற மேம பாடும், உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதும் அத்தியாவசியத் தேவைகளாகும்.

சீனாவில் 2000 ஆவது ஆண்டில் இருந்து 2010ஆம் ஆண்டு வரை ஏற்பட்டுள்ள நகர்ப்புறங்களின் வளர்ச்சி, உலகத்தில் வேறு எங்கும் காண முடியா தது. மேற்குறிப்பிட்ட 10 ஆண்டுகளில் மட்டும் 20 கோடி பேர் கிராமங்களில் இருந்து நகரங்களுக்குக் குடிபெயர்ந்துள்ளனர். தற்போது சீனாவின் மொத்த மக்கள் தொகையில் 50 சதவிகிதம் பேர் நகரங்களில் வசிக்கிறார்கள்.

இந்த குறுகிய காலகட்டத்தில் கிராமங்களாக இருந்த பல பகுதிகள் நகரங்கள் எனும் அந்தஸ்துக்கு மாற்றி அமைக்கப்பட்டு, பல வசதிகளைப் பெற்றுள்ளன. அந்த வகையில் 20 ஆயிரம் புதிய நகரங்களும், 360 மாநகரங்களும் அங்கு உருவாகியுள்ளன.

முக்கிய நகரங்கள் என்று எடுத்துக் கொண்டால், தலைநகர் பெய்ஜிங்கில் 2 கோடிப் பேர் வசிக்கிறார்கள். சீனாவின் பொருளாதாரத் தலைநகரமான ஷங்காயில் 2 கோடியே 30 இலட்சம் பேர் வசிக்கிறார்கள். ஷங்காய் கண்டுள்ள வளர்ச் சியை, அசுர வளர்ச்சி எனக் கூறலாம்.

அமெரிக்காவின் நியூயோர்க் மாநகரம், இவ்வளவு பெரிய நகரமாக உருவெடுக்க சுமார் 100 ஆண்டுகள் ஆகியது. ஆனால், ஷங்காய் நகரம் கடந்த 15 ஆண்டுகளுக்குள் நியூயோர்க் போல 2 மடங்கு வளர்ச்சியைக் கண்டுள்ளது. Sky Scrapers என்று கூறப்படும் வானளாவிய உயரமான கட்டடங்கள் மட்டும் ஷங்காய் நகரில் 4 ஆயிரம் உள்ளன.

நியூயோர்க்கில் 2001இல் தீவிரவாதிகளால் தாக்கப் பட்ட உலக வர்த்தக மையக் கட்டடம், 1727 அடி உயரம் கொண்டிருந்தது. தற்போது உலகத்திலேயே உயரமான கட்டடம் துபாயில் உள்ளது. 'புர்ஜ் காலி்.பா' (Burj Khalifa) என்ற அந்தக் கட்டடம் 2717 அடி உயரமுடையது. 2010ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

இந்தியாவில் உயரமான கட்டடங்களைக் கட்ட பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. பல நகரங்களில்



அதற்கு அனுமதி இல்லை. மும்பையில் தற்போது வானளாவிய கட்டடங்கள் 85 கட்டப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று உலக அளவில் இடம் பெறக் கூடிய வகையில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2362 அடி உயரத்துடன் 125 மாடிகளைக் கொண்டதாக உருவாகி வரும் 'Sky Scrapers' கட்டடப் பணி 2016ஆம் ஆண்டில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நன்றி:துக்ளக்**

# ஜெனிலியா திருமணம்




"போய்ஸ்" படம் மூலம் அறிமுகமாகிய நடிகை ஜெனிலியா, ஹிந்தி நடிகர் ரிதேஷ் தேஷ்முக் திருமணம் மராட்டிய முறைப்படி மும்பையில் வெள்ளிக்கிழமை அன்று நடந்தது.

தமிழில் 'போய்ஸ்', 'சச்சின்', 'சந்தோஷ் சுப்பிரமணி யம்', 'உத்தமபுத்திரன்', 'வேலாயுதம்' உட்பட பல படங் களில் நடித்தவர் ஜெனிலியா. ஹிந்தி, தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். இவரும் ஹிந்தி நடிகர் ரிதேஷ் தேஷ்முக்கும் 9 வருடங்களாக காதலித்து வந்தனர். ரிதேஷ் தேஷ்முக், மகராஷ்டிர முன்னாள் முதல்வரும் இப்போதைய மத்திய அமைச்சருமான விலாஸ்ராவ் தேஷ்முக்கின் மகன்.

இரு குடும்பத்தினரின் சம்மதத்துடன் திருமண நிச்சயதார்த்தம் வியாழனன்று நடந்தது. வெள்ளி காலை மும்பையில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் திருமணம் நடந்தது. ஹிந்தி, தமிழ், தெலுங்கு திரையுலகினருடன் மத்திய அமைச்சர் சரத் பவார், பிருத்விராஜ் சவுஹான், பிரபுல் படேல் உட்பட பல அரசியல் தலைவர்களும் திருமணத்திற்கு வந்திருந்தனர்.

# சீனியில் விஷத் தன்மை; விஞ்ஞானிகள் தகவல்!




சீனி விஷத்தன்மை வாய்ந்ததென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். சிகரட், மதுபானவகைகள் போன்று இதனையும் கட்டுப்படுத்த வழிசெய்யவேண்டு மெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்த அரசு வரிவிதித்தல் உட்பட பல சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டு மெனவும் ஆய்வாளர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

சீனி சேர்க்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்கள் உடல் எடை அதிகரித்தல், இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள், புற்றுநோய் மற்றும் ஈரல் தொடர்பான நோய்களுக்குக் காரணமாக அமைவதாக விஞ்ஞா னிகள் தெரிவிக்கின்றனர்.

இது உலகளாவிய ரீதியில் வருடாந்தம் 35 மில்லியன் மரணங்களுக்குக் காரணமாக அமைவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் 'The Toxic Truth About Sugar' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஒன்றினை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

அக்கட்டுரையில் போசணைக்குறைபாட்டை விட உடற்பருமன் அதிகரிப்பானது மிகப் பெரும் சவாலாக உள்ளதாகவும் இதில் சீனி முக்கிய பங்கு வகிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அது மட்டுமன்றி சீனியானது மனித உடலின் வளர்சிதை மாற்றத்தினைப் (Metabolism) பாதிப்பதுடன், ஹோர்மோன்களின் சீரற்ற சுரப்புக் கும், உயர் குருதி அழுக்கத்துக்கும் காரணமாக அமைவதாக அக்கட்டுரையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# திருமண கேக்!

பல திருமணச் சடங்குகளின் பின்னணி யாக, குலத்தைத் தழைக்கச் செய்வது என்ற கருத்து உள்ளது. திருமண கேக்குக்கும் அது பொருந்தும். கோதுமை, பார்லியில் செய்த சிறு கேக்குகளை ரோமாபுரியினர் மணப் பெண்ணின் தலையில் உடைப்பதில் இருந்து இவை தொடங்கியுள்ளன.

இன்று நாம் உபயோகிக்கும் வெண்ணிற "ஐசிங்"கோடு கூடிய மூன்றடுக்கு கேக், இரண்டாம் சாள்ஸ் காலத்தில் அறிமுகமானது. லண்டனில் உள்ள சென் பினாட் சேர்ச்சின் கூரான கோபுரத்தின் வடிவில் கேக்குகள் செய்யப்பட்டன. இன்றும் அதே வடிவம் தொடர்கிறது.

மணமக்கள் இணைந்து கேக்கின் முதல் துண்டை வெட்டுகிறார்கள். எதிர்காலம் எதைக் கொடுத்தாலும் இருவருமாகச் சேர்ந்து அதைப் பகிர்ந்துகொள்வது என்பதை இது குறிக்கிறது.



# சேணம் பூட்டிய ஆளற்ற குதிரை!



போர் வீரரின் இறுதி யாத்திரையில் ஆளற்ற குதிரை பங்கேற்பது ரோமாபுரி மக்களின் மிகப் பழமையான வழக்கம். ஒரு போர் வீரனுக்கும், அவனுடைய குதிரைக்கும் ஒன்றாகவே யுத்தப் பயிற்சி அளிக்கப்படும். அந்த வீரனைத் தவிர வேறு யாரையும் அந்தக் குதிரை தனது எஜமானனாக ஏற்காது.

ஓய்வெடுப்பதற்காக ஒரு போர் வீரன் படையிலி ருந்து விலகினால், அவனுடைய குதிரையும் நீங்கி விடும். அதேபோல, போரில் அந்த வீரன் இறந்தால், இடுகாடு வரைக்கும் அந்தக் குதிரை சவப்பெட்டி யைத் தொடர்ந்து செல்லும். எஜமானனுடன் அந்தக் குதிரையும் புதைக்கப்படும்.

மரணத்துக்குப் பிந்தைய வாழ்க்கையை நோக்கி இருவரும் ஒன்றாகவே செல்வார்கள். காலியான பூட்ஸை கால் வைக்கும் வளையத் தில் வைப்பது பின்னாளில் வந்த வழக்கம். அந்தக் குதிரையின் மீது வேறு யாரும் ஏறிச் சவாரி செய்ய முடியாது என்பதை அது குறிக்கிறது. தற்போது இது வெறும் சடங்காக மட்டும் உள்ளது. இறந்தவருடன், குதிரையைப் புதைப்பதில்லை.

# ரணிலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்; பேருவளைக் கூட்டத்தில் குழப்பம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பேருவளையைச் சேர்ந்த ஆதர வாளர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதி ராகக் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பழிவாங்கும் படலத்தை நிறு த்தி கட்சியை வெற்றிப் பாதை யில் இட்டுச் செல்லுமாறு கட் சித் தலைவரை வலியுறுத்தும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட் சியின் ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் பேருவளையில் ஆர்ப் பாட்டமொன்றை முன்னெடுத்த னர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற இடத்திற்கு அப்பால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பேருவளை நகரில் காலை ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்கார ர்கள் கறுப்புக்கொடிகளை ஏந் தியவாறு எதிர்ப்பு நடவடிக்கை யில் ஈடுபட்டனர்.

கட்சியின் உண்மையான ஆதரவாளர்கள் தற்போதைய தலைமைத்துவத்தை அங்கீகரிக் காத நிலையில் சிறிகொத்தவை கட்டியெழுப்புவதற்கு நிதி திரட் டும் போர்வையில் ரணில் விக் கிரமசிங்க கிராமந்தோறும் செல்வதாக ஆர்ப்பாட்டக்காரர் கள் தெரிவித்தனர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடை பெற்ற பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடு பட்டிருந்தனர். எனினும் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் நகர்ந்து செல்ல முற்பட்டனர்.

இதன் போது அருகாமையில் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட குழுவினருக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலைமையின் கீழ் ரணில் விக்கிரமசிங்க தலைமை யில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் ஆரம்பமானது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்த வினைப் புனரமைப்பதற்கு நிதி உதவி வழங்கும் நோக்கில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.

# கடற்றொழில் வரைபடம் முதன்முறையாக உருவாக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய ஸ்தாபனத்தின் துணை யுடன் இலங்கையின் கடற்றொ ழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையும் (நாரா) இல ங்கையின் முதலாவது தொகுதி மீன்பிடி வரைபடத்தை உருவாக் கியுள்ளன.

முதலாவது மீன்பிடி வரை படத்தை இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான பிரதிநிதி பட்ரிக் இவான்ஸ் கடற் றொழில் நீரியல்வள அபிவிரு த்தி அமைச்சின் செயலாளர் தமித்த டி சொய்சாவிடம் கைய ளிக்கப்பட்டது.

இந்த வரைபடமானது பல வண்ணங்கள் அலங்கரிக்கக்கூடி யவாறு இலங்கையின் தேசிய நிலவரைக்கு ஏற்ப வடிவமைக் கப்பட்டுள்ளது. இது இலங்கை யின் வடமேற்கு தெற்கு கிழக்கு கரையோரங்களில் கடற்பாசி சிங்கி இறால் கூனி இறால் சமு த்திரவியல் அலங்கார மீன் வகைகள் போன்ற வணிக முக்கி யத்துவம் வாய்ந்த மற்றும் ஏற் றுமதி சார்ந்த வளங்கள் பற்றிய ஆய்வுகள் மற்றும் முகாமைத் துவ திட்டங்களை உள்ளடக்கும் வகையில் உருவாக்கப்பட்டதா கும்.

இதற்கு கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை (சீடா) விவசாய அபிவிருத்திக் கான சர்வதேச நிதியம் ஆகிய வற்றினால் அமுலாக்கப்படும் திட்டங்கள் மூலம் நிதி வழங்க ப்பட்டதுடன் உணவு விவசாய ஸ்தாபனம் மூலமாக தொழில் நுட்ப உதவி வழங்கப்பட்டது. இவற்றின் ஊடாக இந்த வளங் களின் வியாபகம் மிகையான தன்மை பற்றி பரந்த ஆய்வை நடத்த தேசிய நீரியல்வள ஆரா ய்ச்சி மற்றும் அபிவிருத்தி முக வராண்மைக்கு (நாரா) வழிகிடை த்தது. தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையும் (நாரா) கடற் றொழில் நீரியல்வள திணைக் களமும் இத்தகைய பெறுமதி யான வளங்களை நிலைபே றான வகையில் பயன்படுத்துவ தற்குரிய முகாமைத்துவ திட்டங் களை வடிமைக்கும் முயற்சி ளில் கடற்றொழில் துறையில் சம்பந்தப்பட்டுள்ள மீனவச் சமூ கங்கள், வர்த்தர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களைச் சிறப் பான முறையில் ஒன்றுபடுத்தி யிருக்கின்றன.

# சாரதிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில் பயணம் செய்யும் சாரதிகள் மது அருந்திய நிலை யிலோ, உறக்கத்துடனோ வாக னம் செலுத்த வேண்டாம் என வும் 100 கிலோமீற்றர் வேகத்தை மிஞ்ச வேண்டாம் என நெடுஞ் சாலைகள் மற்றும் வீதி அபிவி ருத்தி அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கி ழமை காலை இடம்பெற்ற விப த்தொன்றில் 26 வயதான இளை ஞர் ஒருவர் உயிரிழந்தைத் தொட ர்ந்து இந்த எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலையில் பயணம் செய்யும்போது ஏதேனும் அவசர நிலை ஏற்பட்டால் 1969 எனும் அவசரசேவை தொலைபேசி இலக்கத்துக்கு அறவிக்கலாம் எனவும் அப்போது அம்புலன்ஸ், பொலிஸ் அல்லது ஏனைய சேவைகள்கொண்ட குழுவொன்று தேவையான இடத்துக்கு அனு ப்பப்படும் எனவும் நெடுஞ்சா லைகள் அமைச்சு அதிகாரி ஒரு வர் கூறினார்.

அதேவேளை, சில சாரதி கள் எல் போர்ட்டுடன் வாகனம் செலுத்துவதாகவும் பயணத் திசையை மாற்றி பயணம் செய் வதாகவும் பயணிகள் சிலர் தெரி வித்தனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சா லையில் பயணம் செய்வதற்கான டிக்கெற் வாங்கப்படும்போது இவ்வீதியில் பயணம் செய்யும் சாரதிகளுக்கான சகல ஒழுங்கு விதிகளும் அடங்கிய துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாம் நிலைப் பாடசாலைகளை மறுசீரமைக்கும் திட்டம் ஆரம்பம்



(கொழும்பு)

ஆயிரம் இரண்டாம் நிலை பாடசாலைகளை மறுசீரமைக் கும் தேசிய திட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் அனுராதபு ரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட் டது.

இதனை முன்னிட்டு அனுராத புரம் வலிசிங்க மகா வித்தியால யத்தின் மகிந்தோதய தொழில் நுட்ப ஆய்வுகூடத்திற்கு ஜனாதி பதியினால் அடிக்கல் நடப்பட் டது.

சிறந்த கல்விக்கான எதிர் பார்ப்புடன் முன்னெடுக்கப்ப ட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம் பாடசாலைகளின் பௌதீக மற்றும் மனித வளங்கள் மேம் படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, அனுராதபுரம் ஜயஸ்ரீ மகா போதியையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழிபட்டார்.

எட்டு விகாரைகளின் அதி பதி பல்லேகம சிறிநிவாச தேர ரினால் இதன்போது ஜனாதிப திக்கு ஆசி வழங்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத் துள்ள அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

# குழந்தை உட்பட ஐவர் படுகாயம் வீதி விபத்துக்களால் விபரீதம்

(கல்முனை)

கல்முனை - பொலநறுவை நெடுஞ்சாலையில் பிள்ளையாரடி யில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற பாரிய வீதி விபத் தில் கைக்குழந்தை உட்பட ஐவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனு திக்கப்பட்டுள்ளனர்.

மாலை 4.20 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக மட் டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலைய வாகனப் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி கே.பால தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து நிந்தவூரை நோக்கி வந்த கார் வீதியை விட்டு விலகி அருகிலிருந்த பனை மரங்களில் மோதிய போதே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. படுகாய மடைந்தவர் தனியார் வங்கி முகா மையாளரென தெரிவிக்கப்படுகின் றது.

பிள்ளையாரடி வீதி ஓரத்தில் பனங்கிழங்கு மற்றும் மீன் விற்பனை செய்து கொண்டிருந்த வியாபாரிகள் இருவரும் இச் சம்பவத்தில் படுகாயமடைந்துள் ளனர். பொலிஸார் தீவிர விசா ரணைகளை மேற்கொண்டுள்ள னர்.

# கோழிகளைத் தாக்கிய வைரஸ் மனிதர்களுக்கு ஆபத்து இல்லை

(கொழும்பு)

நாட்டின் தென் பகுதியில் கோழிகளைத் தாக்கிய வைரஸ காய்ச்சல் மனிதர்களைத் தாக் காது என்றும் இதனால் எவ ரும் அச்சமடையத் தேவையி ல்லை என்றும் மிருக வைத் தியத் திணைக்களம் அறிவித் துள்ளது.

பிங்கிரியவில் பண்ணை யொன்றில் இவ்வாரம் பெரும் எண்ணிக்கையான கோழிகள் இறப்பதற்குக் காரணமான வைரஸ், மனிதர்களின் ஆரோ க்கியத்திற்கு பாதிப்பை ஏற்ப டுத்தாது என மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித் துள்ளது.

இப்பண்ணையிலிருந்து 3 கிலோமீற்றர் ஆரை கொண்ட பிரதேசத்தை தீவிர கண்கா ணிப்பில் வைத்திருக்கவும் அதி காரிகள் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர். அத்துடன் மேற்படி பண்ணையிலுள்ள சுமார் 5300 கோழிகளை அப் புறப்படுத்துமாறு சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இந்த வைரஸ் இலங்கையில் முதல் தடவையாக வெளிவந் துள்ளதாக மிருக வைத்திய நிறுவகத்தின் தலைவர் குமார டி சில்வா கூறினார். இந்த வைரஸ் பறவைகளுக்கு குறைந்தளவான நோய்த் தாக்கத்தை ஏற்படுத்துவதா கும் எனவும் மனிதர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் கூறினார்.



கடந்த வெள்ளிக்கிழமை மன்னாருக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிமேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையை மன்னார், ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடுவதைக் காணலாம். (21)

# கொழும்பு நகர அபிவிருத்திக்கு சர்வதேச நிதி உதவிகள்


கொழும்பு நகர அபிவிருத்திக்கு சர்வதேச வங்கியினூடாக 213 மில்லியன் டொலர் நிதி உதவி பெற அமைச்சரவை அனுமதி வழங்கியுள் ளது. இந்த நிதி கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் ஏற்படும் வெள்ள நிலைமை மற்றும் பொருளாதார செயற்பாடுகளை மேம்படுத்தல் கொழும்பிலுள்ள காணிகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங் களுக்குப் பயன்படுத்தப்படும்.


இந்தத் திட்டத்தின் கீழ் கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் வடிகாலமைப்புகளையும் வாவிகளையும் புனரமைத்தல், கவனம் செலுத்தப்படாத சதுப்பு நிலங்களை அண்மித்த பகுதிகளில் இயற்கை பூங்காக்களை அமைத்தல் என்பனவும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு ள்ளது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினூடாக ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டம் 3 வருடங்களில் நிறைவு செய்யப்படும்.

# சட்டவிரோத காணி சுவீகரிப்பு; பிள்ளையானின் சகோதரன் அடாவடி

கிழக்கு மாகாண முதலமைச் சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனின சகோதரர் சிங்கள வர்த்தகர் ஒரு வருக்குச் சொந்தமான காணியை பலவந்தமாக கைப்பற்றியுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது. கல்குடா பிரதேசத் தில் அமைந்துள்ள இந்தக் காணி பல இலட்சம் ரூபா பெறுமதியா னது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்குடா மயானத்திற்கு அருகா மையில் அமையப் பெற்றுள்ள இந்தக் காணியைச் சுற்றி கிழக்கு முதலமைச்சரின் சகோதரரும் அவ ரது சகாக்களும் வேலிகள் அமைத் துள்ளனர் என செய்தியில் தெரி விக்கப்பட்டுள்ளது. போரின் போது காணியை கைவிட்டுச் சென்ற சிங் கள வர்த்தகர் மீண்டும் பிரதேசத் திற்குச் சென்றபோது, குறித்த காணியை முதலமைச்சரின் சகோ தரர் பலவந்தமாக கைப்பற்றியிரு ந்தமை தெரிய வந்துள்ளதாகவும் போலி காணி உறுதிகளையும் இவர்கள் தயாரித்துள்ளதாக திவ யின செய்தி வெளியிட்டுள்ளது.




இலங்கையின் 64 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று யாழ்.செயலகத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அரச அதிபர் தேசியக் கொடியை ஏற்றிவைப்பதையும், இந்நிகழ்வுகளில் யாழ்.செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டிருப்பதையும் காணலாம்.

(படங்கள் :பார்த்தீபன்)

# மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்; கொக்கிளாயில் யு.என்.எச்.சி.ஆர். உதவி

(கொக்கிளாய்)

கொக்கிளாய் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

கொக்கிளாய்-கருநாட்டுக் கேணி, புளியமுனை ஆகிய பிரதேச மாணவர்களின் வசதி கருதி அவர்களுக்குத் துவிச்சக்கர வண்டியை வழங்குவதற்கான பதிவுகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தின் உதவியுடன் இப்பகுதி பாடசாலை மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பகுதியின் கிராம அலுவலரின் உதவியோடு இப்பதிவு நடவடிக்கைகள் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்குமிடத்து மாணவர்களின் உரிய நேரத்துக்குப் பாடசாலை செல்லுதல், கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய செயற்பாடுகளுக்கு உதவியாக அமையும் என இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (17)

# திடீர் ஒவ்வாமை காரணமாக 19 மாணவர்கள் மயக்கம்

(கொழும்பு)

ஹசலகவிலுள்ள கோலொன கொட மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 19 மாணவ மாணவிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

15 மாணவிகளும் 4 மாணவர்களுமே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

7 ஆம் வகுப்பில் கல்விகற்கும் இம்மாணவர்கள் பாடசாலையில் மேல்மாடியிலுள்ள வகுப்பறையில் இருந்தபோது அவர்களின் உடலில் திடீர் ஒவ்வாமை ஏற்பட்டதாகவும் அதையடுத்து மயக்கமடைந்த அவர்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டதாகவும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அதேவேளை, உடைந்த கூரையைக் கொண்ட இந்த வகுப்பறையில் அதிக வெப்பம் காரணமாக இந்நிலை ஏற்பட்டிருக்கலாம் என ஹசலக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# புதுக்குடியிருப்பு கோம்பாவிலில் செவ்வாய் மீள்குடியேற்றம்

(வவுனியா)

வவுனியா-செட்டிக்குளம் நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ள 200 குடும்பங்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி புதுக்குடியிருப்பு-கோம்பாவிலில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இம் மக்கள் தங்குவதற்காக 200 வீடுகள் தலா இரண்டு இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியில் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது. இதற்கு 600 ஏக்கர் காணி துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. இவ் மீள்குடியேற்றப் பணிகள் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு வீடுகளும் தலா 120 சதுர அடி உடையதுடன் தனியான மலசல கூட வசதியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. குடியேற்றபடும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும என மீள்குடியேற்ற அமைசசர் தெரிவித்துள்ளார்.



## கருத்தரங்கு

இன்று பல்கலைக்கழகங்களில பல்வேறுபட்ட கற்கை நெறிகள் இடம்பெற்று வருகின்றன. எனினும் உயர்தரம் சித்தியடைந்த மாணவர்கள் சரியான வழிகாட்டல் இன்மையினால் சில கற்கை நெறிகளை தெரிவு செய்வது மாத்திரமின்றி தமக்கு பல்கலைக் கழகத்திற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதாகவும் உணர்கின்றனர்.

ஆனால் மறைமுகமாக காணப்படும் கற்கைநெறிகள் மற்றும் வேறு பிரதேசங்களில் உள்ள பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிகள் தொடர்பில் அவர்கள் அறிய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்திசெய்ய வவுனியா மாவட்டத்தில் வழிகாட்டல் கருத்தரங்கொனறை எதிர்வரும் 7 ஆம் திகதி வவுனியா மாவட்ட கல்வி சமூக அபிவிருத்தி சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

# திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் பற்றிய கருத்தரங்கும், கருத்தாடலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வின் வரவேற்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், தொடக்கவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாசும் வழங்குவர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தின் கட்டமைப்பு என்ற பொருளில் பேராசிரியர் அ.சண்முகதாசும், திருஞான் சம்பந்தமூர்த்தி நாயனார் காட்டும் வாழ்வியல் என்ற தலைப்பில் நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியர் க.க.ஈஸ்வரனும் கருத்துரைகளை வழங்குவர்.

கருத்தரங்கைத் தொடர்ந்து கருத்தாடல் இடம்பெறும். இதன் இணைப்பாளர்களாக சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பாலசண்முகன், மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர் ந.சத்தியவேந்தன் ஆகியோர் பங்கேற்பர்.

இளைய தலைமுறையினரிடையே சமய நம்பிக்கைகளைக் கட்டி வளர்க்கும் நோக்குடனும் ஆய்வுப் பார்வையில் சமய இலக்கியங்களை அணுகும் முறைமையைப் பயிற்றுவிக்கும் எண்ணத்துடனும் இக்கருத்தரங்கு நடத்தப்படுகிறது எனவும், ஆர்வமுள்ள எவரும் இக்கருத்தரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம் எனவும் இதன் ஏற்பாட்டாளர்களான [illegible]ாசிரியர் அ.சண்முகதாஸ், விரிவு[illegible]ாளர் ச.லலீசன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

மண்டபத்திற்கான அனுசரணையை யாழ்.மாநகரசபையின் கலாசாரப் பகுதியினரும் நிகழ்வுக்கான அனுசரணையை திருநெல்வேலிச் சந்தி பிரகாந்த் போட்டோ கொப்பி நிறுவனத்தினரும் வழங்கியுள்ளனர். (10)

# முல்லைக் கச்சேரியில் ஊழியர்கள் சிரமதானம்

(முல்லைத்தீவு)

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன் தினம் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பணிகளில் செயலக அதிகாரிகள் அனைவரும் இணைந்து கொண்டனர்.

சுதந்திரதின நிகழ்வுகள் நேற்றைய தினம் நாடு பூராகவும் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (04)

# பயணிகள் விமான சேவையை தரம் உயர்த்த ஏற்பாடு

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தனது விமானங்களின் எண்ணிக்கையை 30 ஆக அதிகரிக்கவுள்ளது.

இந்த விமானங்களை இயக்குவதற்கு அனுபவமும் திறமையுமிக்க விமான ஓட்டிகள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஆளணியில் சேர்த்துக் கொள்ளும் பணியை சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இப்பிராந்தியத்தில் சிறந்த விமான சேவையாக சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை ஏற்படுத்துவதே இதன் குறிக்கோளாகும். சமீபத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சிறிலங்கன் எயார்லைன்ஸ் கெடெட் பைலட்மார் குழுவொன்றை தெரிவு செய்து அவர்களுக்கு விமானம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கச்சான் அறுவடை கொக்கிளாயில் அமோகம்

(கொக்கிளாய்)

கொக்கிளாய்-புளியமுனை கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களால் விதைக்கப்பட்ட கச்சான், அறுவடை செய்யப்பட்டு வருகின்றது. இப்பகுதி மக்கள் அதிக விளைச்சலை எதிர்பார்த்து காத்திருந்த போதிலும் பயிருக்கு வேண்டிய ஒரு பருவ மழை பொய்த்துப் போன காரணத்தால் தாம் எதிர்பார்த்த விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித் துள்ளனர். ஆயினும் கச்சான் அறுவடை வேலைகளும் கச்சான் சந்தைப் படுத்தும் வேலைகளும் தற்போது இப்பிரதேசத்தில் முனைப்புப் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. (17)





காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் அமைக்கப்படவிருக்கும் கோகுலம் மற்றும் பிருந்தாவனத்துக்கான அடிக்கல் நாட்டுவதற்காக பிரதமர் டி.எம்.ஜெயரட்ண மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆகியோர் அழைத்து வரப்படுவதையும், பிரதமர் நினைவுக்கலைத் திரைநீக்கம் செய்து வைப்பதையும் காணலாம்.

# லப்டொப் வெப்பம் தணிக்க...

கடந்த சில ஆண்டுகளாக, லப்டொப் கம்ப்யூட்டர்களில் ஏற்படும் வெப்பம் குறிதத கவலை, இவற்றைப் பயன்படுத்து வோரிடையே அதிகரித்து வருகிறது. லப்டொப் கம்ப்யூட்டர் பயன்பாடு அதிகரிப்பினால், இந்த கவலைக்கான காரணங்களையும், தீர்வுகளையும் பலரும் கண்டறிந்து வருகின்றன்ர். சில இடங்களில், லப்டொப் கம்ப்யூட்டர்கள் கூடுதல் வெப்பத்தினால், தீப்பிடித்த தகவல்களும் மக்களை அதிர்ச்சி அடையச்செய்தன. டெல், சோனி, ஏசர் போன்ற நிறுவனங்கள், தாங்கள் விற்பனை செய்த லப்டொப் கம்ப்யு,ட்டர்களில் உள்ள பற்ற ரிகள் அதிக வெப்பத்தை விரைவில் அடைந்த தனால், அவற்றை வாங்கிக் கொண்டு, புதிய பற்றரிகளைத் தந்த நிகழ்வுகளும் ஏற்பட்டன.

மோசமான பற்றரிகளைத் தவிர்த்து, லப்டொப் கம்ப்யூட்டர்கள் வெப்பம் அதிகமாக வெளிப்படுத்து வதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. நாம் பயனபடுத்தும் அனைத்து எலக்ட்ரோனிக் பொருட்களுமே, அவை இயங்கத் தொடங்கியவுடன் வெப்பத்தை வெளியிடு கின்றன. ஒரு டிவிடி பிளேயர் இயங்கிய சில நிமிடங்கள் கழித்து, அதில் கைகளை வைத்துப் பார்த்தால், இந்த வெப்பத்தின் தன்மையை அறியலாம். டெஸ்க்டொப் கம்ப்யூட்டர்களை விட, லப்டொப் கம்ப்யூட்டர்களில் இடம் மிகக் குறைவு. இதனால், அதில் வைக்கப்பட்டுள்ள வெப்பத்தை வெளிப்படுத்தும் எலக்ட்ரோனிக் பொருட்கள், சிறிய இடத்தில் நெருக்கமாக வைக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் அமைகின்றன. நெருக்கமாக இருப்பதனால், இவற்றி லிருந்து வெளிப்படும் வெப்பம் வெளி யேற மிகக் குறைந்த இடமே கிடைக்கிறது.

அடுத்த பிரச்சினை இயக்கத்திறன். லப்டொப் கம்ப்யூட்டர்களில், அதிக வேகத்தில் இயங்கும் கூடுதல் திறன் கொண்ட எலக்ட்ரோனிக் பொருட்கள் பொருத்தப் படுகின்றன. பதியப்படும் ஒப்பரேட்டிங் சிஸ்டங்களும் அவை வேகமாக இயங்க, இந்த எலக்ட்ரோனிக் பொருட்களை கூடுதலாக இயக்குகின்றன. இதனால் அதிக வெப்பம் உருவாகிறது.

லப்டொப் கம்ப்யூட்டரைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் இது தெரியும். அதனால் தான், வெப்பத்தினை வெளியேற்றும் வகையில் சிறிய விசிறிகள், ஹீட் ஸிங்க் எனப்படும் தகடுகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், இவற்றால் முழுமையாக வெப்பத்தினை வெளியேற்ற முடியவில்லை. விசிறிகள் காலப்போக்கில் வேகம் குறைந்து இயங்குவ தால், வெப்பம் வெளியாவதில் பிரச்சினை ஏற்படுகிறது.



பொதுவாக லப்டொப்பில் ஹார்ட் வேர் பிரச்சினை ஏற்பட இந்த வெப்பம் அடிப்படை காரண மாக உள்ளது. எனவே இந்த வெப்பத்தினை வெளியேற்று வதிலும், அ த னை கு ளி ர வை ப் பதிலும் க வ ன ம செலுத்தி னால் பல பிரச்சினை கள் ஏற்படுவதனை முன்கூட்டியே தடுக்கலாம்.

விசிறிகள் சோதனை: லப்டொப்பில் அதிக வெப பம் உருவாகிறது என்று தெரிந்தால், உடனே கம்ப யூட்டரைத் திறந்து, இயக்கத்தின்போது அதில் பொருத் தப்பட்டிருக்கும் அனைத்து விசிறிகளும் சரியாக அதன் அதிகபட்ச வேகத்தில் இயங்குகின்றனவா எனச் சோதிக்க வேண்டும். பெரும்பாலும் இவற்றை நாம் திறந்து பார்க்க இயலாது. திறந்தால், நிறுவனங்கள் வோரண்டி ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எனவே விசிறிகள் இயக்கத்தினைக் காட்ட இணையத்தில் கிடைக்கும் சொபட்வேர் புரோகிராம்களைப் பயன்படுத்தி அறிய லாம். இந்த சொப்ட்வேர் புரோகிராம்களை, லப்டொப் கம்ப்யூட்டர் தயாரிக்கும் நிறுவனமே, அதன் இணைய தளத்தில் கொண்டிருக்கலாம்.

காற்று துளைகளின் சுத்தம்: வெப்பம் வெளியேறு வதற்காக, அமைக்கப்பட்டிருக்கும் காற்று துளைகளை அடிக்கடி கவ னிக்க வேண்டும். இவற்றில் தூசு படிந்து அடைத்துக் கொண்டிருந்தால், வெப்பம். விரைவாக வெளியேற்றப்படமாட்டாது. எனவே சுத்தம் செய்வது அவசியம்.

பயாஸ் சோதனை: நம் பயாஸ் செட் டிங்ஸ் மாற்றி அமைப்பதன் மூலம், வெப்பம் உருவாவதனை அறியலாம். இதற்கு அமைப்பு எப்படி இருக்க வேண்டும் அல்லது எப்படி இதனை மாற்றலாம் என பதற்கு, உங்கள் லப்டொப் கம்ப்யூட்டர் தயரித்த நிறுவனத்தின் இணைய தளம் சென்று பார்க்கவும். சில நிறுவனங்கள், இந்த பயாஸ் அமைப்பினையும் அப்டேட் செய்து புரோகிராம்களை வெளியிட்டி ருப்பார்கள்.

பொதுவான சில பழக்கவழக்கங்க ளையும் நாம் மேற்கொண்டால், வெப்பம் உருவாவதனைத் தடுக்கலாம். வெப்பமான, சூரிய ஒளிபடும் இடத்தில் வைத்து லப் டொப் கம்ப்யூட்டரை இயக்கக்கூடாது. அதேபோல, மூடப்பட்ட கார், சிறிய அறை ஆகியவற்றில் இயக்க கூடாது. ரேடியேட்டர்கள், வெப்பம் வெளியேறும் இடங்கள் அருகே லப்டொப் கம்ப்யூட்டரை வைத்திருக்கக்கூடாது. இந்த கம்ப்யூட் டரை லப்டொப் என அழைத்தாலும், நம் தொடைகளின் மீது வைத்து இயக்குவது கூடாது. இதனால், வெப்பம் வெளி யேறும் வழிகள் தடைபடும். நம் உடலையும் இந்த வெப்பம் தாக்கும். மெத்தை கள், துணி விரிப்புகள் ஆகியவற்றின் மீது இவற்றை வைத்து இயக்குவதும் தவறு.

இப்போது லப்டொப் கம்ப்யூட்டர்களை வைத்து இயக்கவென, சிறிய தாங்கிகள் (Stands) விற்பனை செய் யப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி னால், நல்ல இடைவெளி கிடைப்பதனால், வெப்பம் வெளி யேறுவது எளிதாகிறது. இந்தத் தாங்கிகள் அலுமினியத் தினால் செய்யப்பட்டிருந்தால், வெப்பத்தினை அது எடுத்துக்கொள்ளும்.

லப்டொப் கம்ப்யூட்டரில் வெப்பம் உருவாவதனைத் தடுக்க முடியாது. எனவே வெப்பம் எளிதில் விரைவாக வெளியேற்றப்படும் வழிகளை நாம் நம் பழக்கத்தின் மூலம் தடுக்காமல் இயங்க வேண்டும்.

மேலும் கூடுதல் துணைச் சாதனங்களைப் பயன் படுத்துவதன் மூலம் வெப்பத்தினை வெளியேற்று வதனை விரைவுபடுத்தலாம். இந்த வழிகளை மேற்கொண்டால், வெப்பமானது லப்டொப் கம்ப் யூட்டரின் பாகங்களைத் தாக்குவதனைத் தடுக்க லாம்.


# ரெஜிஸ்ட்ரி கிளீனர்கள்.

விண்டோஸ் இயக்கத்தில், மால்வேர் மற்றும் வைரஸ்களுக்கு அடுத்தபடியாக, ரெஜிஸ்ட்ரி தான் விண்டோவில் பலவீன மான ஒரு இடமாகும். இவற்றினால், விண் டோஸ் முடக்கப்படலாம் மெதுவாக இயங்கலாம் அல்லது பிரச்சினைக்குரிய தாகலாம்.

ரெஜிஸ்ட்ரியில் தான் அனைத்து புரோ கிராம்களின் இன்ஸ்டலேஷன் மற்றும் அவற்றின் இயக்கம் குறித்த வரிகள் எழுதப்படுகின்றன. ஒரு புரோகிராமினை இன்ஸ்டோல் செய் திடுகையில் இவை எழுதப்படும் ஆனால், அந்த புரோகிராமினை, கம்ப்யூட்டரிலிருந்து நீக்குகையில், ரெஜிஸ்ட்ரியில் எழுதப்பட்ட பல வரிகள் தங்கி விடு கின்றன. இவை விண்டோஸ் இயக்கத்தின் வேகத்தினை மந்தப்படுத் துகின்றன. எனவே தான், விண்டோஸ் மெதுவாக இயங்கினால், ரெஜிஸ்ட்ரியை முழுமையாக சுத்தப்படுத்துங்கள் தேவை யற்ற வரிகளை நீக்குங்கள் என நமக்கு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.


ஆனால், ரெஜிஸ்ட்ரியின் வரிகளை நீக்குவது அவ்வளவு எளிதான செயல் அல்ல. நீக்கக் கூடாத வரிகளை நீக்கி விட்டால், விண்டோஸ் தொடர்ந்து செயற் படுவது அல்லது சில புரோகிராம்கள் முழுமையாகச் செயல்படுவது சிக்கலாகி விடும். இதனால் தான், பல புரோகிராம் கள் இதற்கென்றே தயாரிக்கப்பட்டு இணை யத்தில் தரப்பட்டுள்ளன. சில புரோகிராம்கள் மற்ற பயன் பாட்டுடன், ரெஜிஸ்ட்ரி சுத்தப்படுத்தும் பயன்பாட் டினையும் சேர்த்துத் தரு கின்றன. பெரும்பாலன புரோ கிராம்கள் இலவசமாகவே இணையத்தில் கிடைக்கின் றன. இவற்றில் எளியதாக வும், அதிக பயனுள்ளதாகவும் திறன் கொண்ட ஐந்து புரோ கிராம்கள் இங்கு தரப்படு கின்றன.

**1. CCleaner** : ரெஜிஸ்டரி சுத்தப்படுத்தும் புரோகிராம் களில், மிகச் சிறப்பான இடம் கொண்டுள்ள புரோகிராம் சிகிளீனர் ஆகும். இதனைப் பயன்படுத் தியதால், சிஸ்டம் பிரச்சினைக்குள்ளா கியது என்ற சொல்லை இந்த புரோ கிராம் பெற்றதில்லை. இதன் இன்னொரு சிறப்பு என்ன வென்றால், இதில் உள்ள ரெஜிஸ்ட்ரி கிளீனரைப் பயன்படுத்து முன்னர், ரெஜி ஸ்ட்ரி பைலுக்கு ஒரு Back up எடுத்துக் கொள்ளும்படி இது அறிவுரை தரும். மேலும், சிகிளீனர், மிக நுணுக்கமாக ரெஜிஸ்ட்ரி பைலை ஆய்வு செய்து வரிகளை நீக்காது. தெளிவாக தேவையற்ற வரிகள் என்று தெரிந் தாலே, அவற்றை நீக்கும். எனவே இத னால் பிரச்சினை ஏற்பட்டதில்லை.





**2. Comodo System Utilities** : ரெஜிஸ்ட்ரி கிளீனிங் மட்டுமின்றி மற்ற வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு புரோ கிராம் இது. இதனை http://www.comodo.com/home/support-maintenance/system-utilities என்ற முகவரியில் உள்ள இணைய தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இது சிகிளீனரைக் காட்டி லும் இன்னும் ஆழமாகச் சென்று, நுணுக்க மான முறையில் இடம்பிடித்த தேவை யற்ற வரிகளைக் கண்டறிந்து நீக்கு கிறது. இதனை ஒருமுறை பயன் படுத்தினால், அதன் பின், கம்ப்யூட்டர் இயங்கும் வேகத்தினைக் கொண்டு, இந்த புரோகிராமின் ரெஜிஸ்ட்ரி கிள்னிங் திறனை அறிந்து கொள்ளலாம்.


**3. TweakNow Reg Cleaner :** கொமொடோ அளவிற்கு நுணணிய மாக வரிகளைக் கண்ட றியாவிட்டாலும், ட்வீக் நவ்ரெக் கிளீனர், மிக வேகமாக ரெஜிஸ்ட்ரியைச் சுத்தப்படுத்தும் எனப் பெயர் பெற்றதாகும் வேகம் ஒன்று மட்டும் உங்கள் விருப்பம் எனில், இந்த ரெஜிஸ்ட்ரி கிளீனரைப் பயன்படுத்தலாம். விண்டோஸ் இயக்கத்தில் ஏற்படுத்தப்படும் தற்காலிக பைல்கள், இணைய உலாவில் உரு வாக்கப்படும் பைல்கள், கூகுள் குரோம் மற்றும் பயர்பொக்ஸ் பிரவுசர்களின் டேட்டா பைல்கள் என அனைத்தையும் சுத்தப்படுத்துவதுடன், விண்டோஸ் செட் டிங்ஸ் அமைப்பையும் சரி செய்கிறது. அத்துடன் நெட்வேர்க் செட்டிங்ஸ் சரியாக இல்லை எனில் அதனையும் சரி செய் கிறது. இதனைப் பெற http://www.tweak now.com/ Reg Cleaner.php என்ற முகவரியில் உள்ள இணையத் தளம் செல்லவும்.




**4. Wise Registry Cleaner** : ரெஜிஸ்ட்ரி கிள்னிங் சரியாக மேற்கொள்ளப் படா விட்டால், சில வேளைகளில் விண் டோஸ் முடங்கும் நிலை உருவாகும். அதனால் தான், ஏற்கனவே உள்ள ரெஜிஸ்ட ரியை Back up எடுத்து வைத்துக் கொள்ள அறிவுரை தரப்படுகிறது. ரெஜிஸ்ட்ரி கிளீன் செய்த பின்னர், அது சரியாக இயங்காவிட்டால், Back up செயத பைலை மீண்டும் அமைத்து இயக்க லாம். பலர் இதனை மேற் கொள்வ தில்லை. இந்த வைஸ் ரெஜி ஸ்ட்ரி கிளீனர், இதனை மிக எளிதான ஒரு வழி மூலம் நமக்கு உத விடுகிறது. இதில் உள்ள பட்டன் ஒன்றின் மீது கிளிக் செய்வதன் மூலம், முந்தைய ரெஜிஸ்ட்ரி பைலை மீண்டும் கொண்டு வந்து சரி செய்கிறது. இந்த புரோகிராமினைப் பெற http://www.wisecleaner.com/wiseregistrycleanerfree.html என்ற முகவரியில் உள்ள இணையத்தளத்திற்குச் செல்ல வும்.




**5. AML Registry Cleaner** : அதிக திறனும், பல்முனைப் பயன்பாடும்




கொண்டது ஏ.எம்.எல். ரெஜிஸ்ட்ரி கிளீனர். நிறைய கூடுதல் வசதிகள் தரப்பட்டுள்ளன. சொல் கொடுத்து தேடி அறியும் வசதி, நாமாக குப்பை பைல்களை அழிக்கும் வசதி, விண்டோஸ் தொடங்குகையில் இயங்கும் அனைத்து பைல்களையும் காணும் வசதி எனப் பலவகை வசதிகளைத் தருகிறது. மற்ற கிளீனர்களில் இருப்பதைக் காட்டிலும் பல செயற் பாடுகளைத் தருவதால், நிறையப் படடன்கள் இதில் தரப்பட்டிருப்பதனைக் காண லாம். ஆனால், இதனாலேயே இதனைப் பயன்படுத்துபவர்கள், ரெஜி ஸ்ட்ரி குறி யீடுகளைப் பிரித்து விடுகின்றனர். எனவே ரெஜிஸ்ட்ரி Back up செய்த பின்னர், இதனைப் பயன்படுத்துவது நல்லது. இந்த புரோகிராமினைப் பெற http://www.amltools. com/ என்ற முகவரியில் உள்ள இணைய தளம் செல்லவும்.

இன்னும் நிறைய ரெஜிஸ்ட்ரி கிளீனர்கள் இணையத்தில் கிடைக்கின் றன. ஆனால், மேலே கூறப்பட்ட கிளீனர்கள் அனைத்தும் பல வசதிகள் கொண்டவையாக உள்ளன. நீங்களும் பயன்படுத்திப் பார்க்கலாம்.

# காந்திஜி - சென். ஜேம்ஸ் எல்லே போட்டியில் வெற்றி

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உப்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்துறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் பெண்கள் பிரிவில் ஊர்காவற்துறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும், ஆண்கள் பிரிவில் காந்திஜி விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.

இதில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் ஊர்காவற் துறை சென்ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து எழுவைதீவு பத்திமா விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஊர்காவற்துறை சென. ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊர்காவற்துறை நேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொணடது.

இதில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி 9:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (65)

# கொக்கிளாய் பாடசாலை வீதி ஓட்டப்போட்டி நிகழ்வு

(கொக்கிளாய்)

கொக்கிளாய் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு வீதியோட்டப் போட்டி கடந்த வியாழக்கிழமை நடாத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஆண், பெண் ஆகிய இரு பிரிவினரிடையே நடாத்தப்பட்டது. இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் அ.நிராஸ் முதலாம் இடத்தையும், க.நிசாந்தன் இரண்டாம் இடத்தையும், ரூ.யேசுமதுசன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

பெண்கள் பிரிவில் சாந்தினி முதலாம் இடத்தையும், சுகந்தினி இரண்டாம் இடத்தையும், ருத்திரா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (17)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

கொக்கிளாய் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கொக்கிளாய் அ.த.க பாடசாலையின் அதிபர் ர.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயத்தின் கரைதுறைப்பற்று கேட்டக்கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக லெப்டினன்ட் கேணல் குமாரசிறி (கொமாண்டிங் ஒப்பீசர் கருநாட்டுக்கேணி இராணுவ முகாம்), கொக்கிளாய் கிராம அலுவலர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்தகாலப் போர்ச் சூழல்களினால் இடம்பெயர்ந்து மீண்டும் தனது சொந்த இடத்தில் மீள இயங்கும் கொக்கிளாய் அ.த.க பாடசாலை 27 வருடங்களின் பின்னர் கொண்டாடுகின்ற முதலா வது இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

♦♦♦

முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் பாடசாலை முதல்வர் இ.பாலேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கண்டாவளை பிரதேச செயலாளர் பி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராகக் கண்டாவளை கோட்டக் கல்வி அதிகாரி வி.இராஜகுலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். நாவலர் இல்லம், ஞானப்பிரகாசர் இல்லம், விபுலானந்தர் இல்லம் ஆகிய 3 இல்லங்களுக்கிடையிலான போட்டிகள் நடைபெற்றுள்ளன. (கே)

♦♦♦

யாழ்ப்பாணம் நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு சென்.மேரிஸ் மைதானத்தில் இடம்பெறும்.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம அதிதியாக கல்வி, விளையாட்டு அமைச்சின் வடமாகாண செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்வார். (105)

# மொஹமட் ஆமீரை மீண்டும் தேசிய அணிக்கு வரவேற்கிறேன்

(இஸ்லாமாபாத்)



இளைய பந்துவீச்சாளர் மொஹமட் ஆமீரை மீண்டும் தமது தேசிய அணிக்கு வரவேற்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்டநிர்ணய குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த 19 வயதான ஆமீர் கடந்த புதன்கிழமை லண்டன் சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் பேரவை விதித்துள்ள போட்டித் தடை நிறைவுபெற்றதன் பின்னர் அவர் அணியில் மீண்டும் விளையாட வேண்டுமென ஷகா அஷ்ரப் குறிப்பிட்டுள்ளார்.

ஆமீருக்கான புனர்வாழ்வு திட்டத்திற்கு நிதி உதவி வழங்கு வதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் நிறுவன தலைவர் ஷகா அஷ்ரப் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமக்கு விதிக்கப்பட்டுள்ள ஐந்தாண்டு கால போட்டித் தடைக்கு எதிராக விளையாட்டுக்கான மத்தியஸ்த நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய மொஹமட் ஆமீர் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வலிகாமம் வலய கால்பந்தாட்டம் மானிப்பாய், மகாஜனா சம்பியன்

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நேற்று சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

17 வயது காலிறுதிப்போட்டியில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியுடன் மோதி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

மற்றொரு போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், இளவாலை புனித ஹென்றியரசர் அணியும் மோதின. இரு அணிகளும் கோல் எதுவும் போடாத நிலையில் தண்ட உதை மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை 2:1 என்ற வீதத்தில் வெற்றியீட்டியது.

17 வயதுப் பிரிவில் இடம்பெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் அணி வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி அணியுடன் மோதியது. 4 : 0 என்ற கோல் கணக்கில் இளவாலை அணி மூன்றாம் இடத்திற்குத் தெரிவானது.

17 வயது இறுதியாட்டத்தில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. மானிப்பாய் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சம்பியனானது.

காலிறுதி ஆட்டத்தில் 19 வயதுப் பிரிவில் மகாஜனாக் கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரியுடன் மோதி தலா ஒரு கோல்களைப் போட்டன. இறுதியில் தண்ட உதைமூலம் 4: 3 என்ற கோல் கணக்கில் மகாஜனாக் கல்லூரி வெற்றியீட்டியது.

மற்றைய காலிறுதி ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் அணி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடன் மோதி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

19 வயது மூன்றாம் இடத்திற்கான தெரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இறுதியாட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் அணியுடன் மோதியது. மகாஜனாக் கல்லூரி 1 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (93)

# குத்துச்சண்டை ஜாம்பவான் மொஹமட்டின் பயிற்றுனர் மரணம்



குத்துச்சண்டை ஜாம்பவான் மொஹமட் அலியின் பயிற்றுநர் அஞ்சலோ டண்டி தமது 90 ஆவது வயதில் காலமாகியுள்ளதாக தெரிவிக கப்படுகின்றது.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தி லுள்ள டம்பா பகுதியீல் டண்டி இயற்கை எய்தியுள்ளதாக அவரின் மகனொருவரை மேற்கோள் காட்டி பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் சர்வதேச குத்துச் சண்டை போட்டிகளை டண்டியின் சகோதரர் ஒருவரே அறிமுகம் செய்திருந்தார். 1960 ஆம் ஆண்டு முதல் மொஹமட் அலியுடன் பணியாற்ற ஆரம்பித்த டண்டி கடந்த மாதம் நடைபெற்ற அவரின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# எட்டு விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றி

(மெல்பேர்ன்)




அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.


இம்முறை விஜயத்தில் அவுஸ்ரேலிய மண்ணில் இந்தியா பெற்ற முதல் வெற்றி இதுவென்பதோடு, 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர் வெளிநாட்டில் இந்தியா பெற்ற முதல் வெற்றியாகவும் இந்தப் போட்டி அமைந்துள்ளது.

மெல்பேர்னில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. ஏரன் பிஞ்ச் 36 ஓட்டங்களையும், மெதயூ வாட் 32 ஓட்டங்களையும், டேவிட் ஹசி 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரவீன் குமார் மற்றும் ராகுல் சர்மா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்தினார்கள்.வெற்றி இலக்கான 132 ஓட்டங்களை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா 19 ஓவர்களில், இரண்டு விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இந்தியா சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கௌதம் கம்பீர் 56 ஓட்டங்களையும், மஹேந்திர சிங்தோனி 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனான இந்தியாவின் ரவீந்ர ஜடேஜா தெரிவானார். இதற்கமைய இரண்டு போட்டிகள் கொண்ட சர்வதேச இருபதுக்கு 20 தொடர், ஒன்றுக்கு, ஒன்று என்ற கணக்கில் சமனிலையில் நிறைவடைந்துள்ளது.

# மஹேல டில்லி - முரளி பெங்களூர்



இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பில்.எல்.) கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான வீரர்களின் ஏலத்தில் இலங்கை அணித் தலைவர் மஹேல ஜயவர்தன 14 இலட்சம் அமெரிகக டொலர்களுக்கு டெல்லி டேர் டெவில்ஸ் அணியினால் வாங்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் அணியின் முன்னாள் சுழற்பந்து நட்சத்திரமான முத்தையா முரளிதரன் 220,000 டொலர்களுக்கு பெங்களூர் ரோயல் சலெஞ்சர்ஸ் அணியினால் வாங்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். 5 ஆவது தொடருக்கான ஏலம் பெங்களூரில் நேற்று நடைபெற்றது. கடந்த வருடம் ஐ.பா.எல். தொடரில் அறிமுகமான கொச்சி டஸ்கர்ஸ் அணி கலைக்கப்பட்டுவிட்டதால் அவ்வணியைச் சேர்ந்த மஹேல ஜயவர்தன, முத்தையா முரளிதரன், ரவீந்திர ஜடேஜா பிரெண்டன் மெக்கலம் முதலான வீரர்களும் ஏலம் விடப்பட்டனர்.

இதனால் இம்முறை இந்த ஏலம் அதிக கவனத்தை ஈர்த்தது. மொத்தமாக 11 நாடுகளைச் சேர்ந்த 144 வீரர்கள் ஏலம் விடப்பட்டனர்.

ரவீந்திர ஜடேஜாவை வாங்குவதற்கு சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் டெக்கான் சார்ஜஸ் அணிகளிடையே கடும் போட்டி நிலவியது. இதில் அறிவிக்கப்படாத தொகையொன்றை வழங்கி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஜடேஜாவை பெற்றது.

மஹேல ஜயவர்தனவுக்கு அடிப்படை தொகையாக 3 இலட்சம் டொலர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் டெல்லி டேர்டெ வில்ஸ் அணி 1.4 மில்லியன் டொலர்களுக்கு வாங்கியது.

முத்தையா முரளிதரனை ரோயல் சலெஞ்சர்ஸ் அணி 220,000 டொலர்களுகக்கு வாங்கியது. பிரெண்டன் மெக்கலம் 900,000 டொலர்களுக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியினால் வாங்கப் பட்டார்.

# தி.மு.கட்சியின் தலைவர் பதவி யாருக்கு? ஸ்டாலின், அழகிரி ஆதரவாளர்கள் மோதல்

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடுத்த தலைவராக யாரைத் தெரிவுசெய்வது என்பதில் அக்கட்சியின் பொதுக்குழுவில் கருணாநிதியின் மகன்களாக மு.க.ஸ்டாலின் மற்றும் மு.க. அழகிரி ஆதரவாளர்களிடையே மோதல் வெடித்தது.

நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற பொதுக் குழுக்கூட்டத்தில் மு.க.ஸ்டாலினை தி.மு.க. வின் அடுத்த தலைவராக முன்னிறுத்துவதை அக்கட்சியின் பொதுச்செயலாளர் க. அன்பழகன், சேலம் மாவட்ட செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோர் வெளிப்படையாக எதிர்த்துள்ளனர். இதனால் தி.மு.க.வின் அடுத்த தலைவராக மு.க.ஸடா லினை நியமிக்கும் தீர்மானம் நிறைவேறவில்லை.

இக்கூட்டத்தில் வீரபாண்டி ஆறுமுகம் பேசுகையில், கழகம்தான் குடும்பம் என்று அண்ணா பேசினார். அதைக் கருணாநிதி பின்பற்றி வருகிறார். கருணாநிதி இருக்கும்போது அடுத்த தலைவர் தேவையில்லை. கருணாநிதியின் பிள்ளைகளான மு.க.அழகிரியும் மு.க.ஸ்டாலினும் நமக்கு ஒன்றுதான். சிலர் கருணாநிதியை தங்களுக்குச் சாதகமாக முடிவு எடுக்க நிர்ப்பந்திக்கின்றனர். ஒருவரை மட்டும் அடையாளப்படுத்துவதை நாம் அனுமதிக்கக் கூடாது என்று மு.க. ஸ்டாலினை முன்னிறுத்த வீரபாண்டி ஆறுமுகம் எதிர்ப்புத் தெரிவித்தார் .

இதற்கு ஸ்டாலின் ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். வீரபாண்டி ஆறுமுகத்தை தொடர்ந்து பேசக்கூடாது என்று கூச்சலிட்டனர்.

அழகிரியின் ஆதரவாளரான வீரபாண்டி ஆறுமுகமும் அவர்களை மீறிப்பேச முயற்சித்தும் பலனில்லை. இதனால் அமளி நீடித்து வந்தது.


இதைக் கட்டுப்படுத்த எழுந்த க. அன்பழகன் பேச்சும் மு.க.ஸ்டாலின் ஆதரவாளர்களிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

க. அன்பழகன் பேசுகையில், கருணாநிதி என் நண்பர். அவரின் பிள்ளைகள் என் பிள்ளைகள். இருப்பினும் ஒருவரை மட்டுமே அடையாளப் படுத்தி முக்கியத்துவம் கொடுப்பதால்தான் இது போன்ற பிரச்சினைகள் எழுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

வீரபாண்டி ஆறுமுகம் எப்போதும் தன் கருத்துகளை ஒளிவு மறைவு இல்லாமல் முன்வைக்கக் கூடியவர். கருணாநிதி தன் தலைவர் என்கிற முறையில்தான் அவரிடம் தன் கருத்துகளைத் தெரிவிக்கிறார். அதில் தவறு ஒன்றுமில்லை. வீரபாண்டி ஆறுமுகம் திமுகவுக்காகத் தன்னை ஒப்படைத்துக்கொண்டவர்.


தி.மு.க ஒன்றும் சங்கரமடம் இல்லை. மடாதிபதி பதவியை ஸ்டாலினுக்குக் கொடுப்பதற்கு என்று கருணாநிதியே கூறியிருக்கிறார். என்னை விட வயது குறைவான கருணாநிதி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது எனக்கு வருத்தமாகத் தான் இருந்தது. என்னுடைய வீட்டார் என்னை மதிப்பார்களா என்றுகூட நினைத்திருக்கிறேன்.

பிறகு நானே அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறேன். கருணாநிதி அளவுக்கு அறிவு பூர்வமானவர்கள் தமிழகத்தில் யாரும் இல்லை. தமிழர்களைக் காப்பாற்ற தி.மு.க தவிர்ந்த வேறு இயக்கம் இல்லை என்றார்.




# புலனாய்வு கண்காணிப்பில் இந்திய ரயில்வே

(புதுடில்லி)




இந்தியாவின் மிகப் பெரிய போக்குவரத்து அமைப்பான இந்திய ரயில்வே நஷ்டத்தில் இயங்குவதற்குக் காரணமாக இருந்த ரயில்வே அதிகாரிகளின் பணிகளை மத்திய புலனாய்வுத்துறை கண்காணித்து வருகிறது.

ரயில்வே பணிகளை குத்தகைக்கு விட்டது மற்றும் பல்வேறு வகைகளில் இந்திய ரயில்வேக்கு ரூபா 1 கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இந்திய ரயில்வே அதிகாரிகள்தான் என்று குற்றஞ்சாட்டி மத்திய கண்காணிப்புத் துறை, அவர்களது பணிகள் குறித்து விசாரிக்குமாறு மத்திய புலனாய்வுத்துறைக்கு பரிந்துரைத்தது.

எனவே இந்திய ரயில்வேயில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிகாரிகளும், தற்போது பணியில் உள்ள அதிகாரிகளும் புலனாய்வுத் துறையின் கண்காணிப்பின் கீழ் வந்துள்ளனர்.

# மக்களின் வாக்குகள் பிரிவதால் அரசியலின் தரம் தாழ்கின்றது

(புதுடில்லி)

மக்களின் வாக்குகள் பிரிவதால் தான் அரசியல் தரம் தாழ்ந்து போகிறது என சோனியாவின் மகள் பிரியங்கா தெரிவித்துள்ளார்.

அமேதி தொகுதியில் உள்ள பால பத்ரபூரில் பிரியங்கா நேற்றுமுன்தினம் பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது,

தேர்தல் என்பது அரசியல் கட்சித் தலைவர்கள் உங்களை சந்திக்க வரும் நேரம். நானும் அப்படி தான் வந்துள்ளேன். ஆனால் யாருக்கு வாக்குப் போட வேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் உங்கள் கையில் உள்ளது. உரிய உரிமை கிடைக்காத மக்களுக்கு இது தக்க தருணம். நீங்கள் வாக்குகளை பிரித்துப் போடுவதால்தான், அரசியல் தரம் தாழ்ந்து போகிறது. சந்தர்ப்பவாத அரசியலாக உள்ளது. மக்கள் தான் முன்னிலை வகிக்க வேண்டுமேயொழிய, தலைவர்கள் அல்ல.



தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்று தெரியாத நிலையில் ஏன் இப்படிக் கடுமையாக உழைக்கிறாய்? என அண்ணன் ராகுலிடம் கேட்டேன். அதற்கு அவர் குறிப்பிடுகையில், தேர்தல் முடிவைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், பின் தங்கியுள்ள மாநிலத்தை முன்னேற்ற வேண்டும் என்பது தான் என்னுடைய இலட்சியம் என்றார்.

காங்கிரஸ் இங்கு ஆட்சிக்கு வந்தால், மாநிலம் மேம்படும். எங்கள் கட்சி வேட்பாளர்கள் கொலை உள்ளிட்ட எந்தக் குற்றத்திலும் ஈடுபடவில்லை. யாருடைய நிலத்தையும் அபகரிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

# "இந்தியன் முஜாகிதீன்" கைது

(புதுடில்லி)



பாகிஸ்தானில் செயற்பட்டுவரும் பயங்கரவாத அமைப்பான இந்தியன் முஜாகிதீன் அமைப்பைச் சேர்ந்த ஒருவனை நேற்றுத் தலைநகர் புதுடில்லியில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளில் ஒன்றான இந்தியன் முஜாகிதீன் அமைப்பைச் சேர்ந்த ஒரு பயங்கரவாதியை நேற்று முன்தினம் டெல்லி ஷாஹின்பாக் பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

இவனிடம் நடத்திய விசாரணையில் பீகார் மாநிலம் நாலந்தா மாவட்டத்தைச் சேர்ந்த தாரீக் (வயது- 35) என்பதும், கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் சிமி அமைப்புடன் தொடர்பில் இருந்து வந்ததும் தெரிய வந்துள்ளது.

பின்னர் இந்தியன் முஜாகிதீன் அமைப்பின் முக்கிய தலைவர்களான ரியாஸ் இக்பால், யாசின் பட்கால் ஆகியோருடன் இணைந்து பல் வேறு பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வந்ததும், கடந்த 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19 ஆம் திகதி டில்லி ஜும்ஆ மசூதி வெடிகுண்டு வழக்கு, பெங்களூர் குண்டுவெடிப்பு ஆகிய சம்பவங்களில் சதித்திட்டம் தீட்டியதும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பயங்கரவாதி தாரீக், டெல்லி குற்றப் புலனாய்வு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு பின்னர் 15 நாள காவலில் அடைக கப்பட்டுள்ளார்.

# ஊழலை ஒழிக்க நடவடிக்கை



(புதுடில்லி)

ஊழலை ஒழிக்க போதுமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த தலைமை செயலர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு பிரதமர் பேசியதாவது,

வாழ்வாதாரம், உணவு, பொருளாதாரம், எரிசக்தி, சுற்றுசூழல், தேசிய பாதுகாப்பு ஆகியவற்றில் உரிய பாதுகாப்பற்ற நிலையிலிருந்து கொண்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும், நம் நாடு வலுவான முன்னேற்ற நிலையில்தான் சென்று கொண்டிருக்கிறது. ஊழலை ஒழிக்க சட்டப்படியான மற்றும் நிர்வாக ரீதியிலான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். மக்கள் சேவைத் திட்டங்களை விரைந்து நிறைவேற்ற நவீன தொழில் நுட்பங்களை முழுமையாக பயன்படுத்த வேணடும்.

மத்திய அரசு இந்த நடைமுறையை கடந்த ஓராண்டாக முடிந்த வரை பின்பற்றி வருகிறது. குடிமக்கள் சாசன மசோதா, மின்னணு சேவை மசோதா ஆகிய மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா மசோதாவை துரதிருர்ஷ்டவசமாக நிறைவேற்ற முடியவில்லை.

விரைவில் லோக்பால் சட்டத்தை அமுல்படுத்துவோம் என்ற நம்பிக்கை உள்ளது. கொள்முதலை ஒழுங்குப்படுத்தும் வகையில் சட்டம் கொண்டு வர திட்டமிட்டுள்ளோம். பொது வாழ்வில் ஒளிவு மறைவின்மை, பொறுப்புடைமை, நேர்மை ஆகியவற்றை முழுமையாக கொண்டு வர நீண்ட நாட்களாகும்.

இதற்காகதான் தகவல் அறியும் உரிமை சட்டம், நீதித் துறை பொறுப்புடைமை மசோதா, ஊழல்வாதிகளை காட்டிகொடுப்பவர்களை பாதுகாக்கும் மசோதா போன்றவற்றை கொண்டு வந்துள்ளோம்.

ஊழலை ஒழிக்க மத்திய மாநில அரசுகள் இணைந்து செயற்பட வேண்டியது அவசியம். விவசாய உற்பத்தியில் மாநிலங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். விவசாய ஆராய்ச்சி நவீனப்படுத்தப்பட வேண்டும்.

வேளாண் வர்த்தகத்தில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். விவசாயிகளிடமிருந்து சில்லறை விற்பனையாளர்கள் நேரடி கொள்முதல் செய்யும் நிலை ஏற்பட வேண்டும். இதன் மூலம் தான் விவசாயிகள் நல்லவிலையை தங்கள் விளை பொருட்களுக்கு பெற முடியும் இவ்வாறு பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார்.




# பிரதமர் பதவி விலக வேண்டும்; எதிரணியின் கோரிக்கை நிராகரிப்பு



(புதுடில்லி)

2ஜி அலைக் கற்றை முறைகேடு தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் உட்துறை அமைச்சர் ப.சிதம்பரம் பதவி விலக வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை காங்கிரஸ் கட்சி நிராகரித்துள்ளது.

கடந்த 18 மாதங்களாக 2ஜி வழக்கில் பிரதமர் மன்மோகன் சிங் மீது சட்ட நடவடிக்கைகளில் அவருக்கு எதிரான உத்தரவு வரவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் முயற்சி செய்தன.

ஆனால் தங்களுடைய காரியத்தை நிறைவேற்ற முடியாமல் எதிர்க்கட்சிகள் தோல்வியடைந்துள்ளன என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், இந்த வழக்கில் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ பிரதமருக்கு தொடர்பு உண்டு என்று உச்ச நீதிமன்றம் கூறவில்லை. அதேபோல் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திற்கு எதிராகவும் எதுவும் கூறவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# தாய்மொழி எதுவாக இருந்தாலும் தமிழ்மொழி கட்டாயம் - ஜெயலலிதா

தமிழ்நாட்டில் கல்வி பயிலும் மாணவர்கள் யாராக இருந்தாலும், அவர்களின் தாய்மொழி எதுவாக இருந்தாலும், கட்டாயம் தமிழ் மொழியை படித்தே தீரவேண்டும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

கடந்த தி.மு.க ஆட்சியில் அனைவரும் தமிழ் படிக்க வேண்டும் என்ற சட்டத்தை கொண்டு வந்தார்கள். ஆனால் அதற்கான தமிழ் ஆசிரியர்களை நியமிக்கவில்லை. அதை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழ்நாட்டில் படிக்கும் மாணவர்கள் தாய்மொழி எதுவாக இருந்தாலும் கட்டாயம் தமிழ் மொழி படித்தாக வேண்டும். கர்நாடகத்தில் கன்னடம் படித்தாக வேண்டும், ஆந்திராவில் தெலுங்கு படித்தாக வேண்டும். அதுபோல் தமிழ்நாட்டில் கட்டாயம் தமிழ் படிக்க வேண்டும் என்பதில் எந்த தவறும் அல்ல. இதில் மாற்றமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

## உலகச் செய்திகள்

# பேரணிகளுக்கு செல்ல வேண்டாம்

(வோஷிங்டன்)


பாகிஸ்தானில் தற்பொழுது உள்ள அரசியல் சூழ்நிலையை காரணம் காட்டி, அங்கு செல்லும் தனது நாட்டு மக்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்தாண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி நேட்டோ படைத்தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு எழுந்துள்ள அரசியல் சூழ்நிலையை சுட்டிக் காட்டி இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. பாகிஸ்தானில் பேரணி நடைபெறும் இடங்களுக்கும், மக்கள் செல்லும் இடங்களுக்கும் செல்ல வேண்டாம் என்று தனது பிரஜைகளுக்கு அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பியர்களை குறி வைத்து அல்கொய்தா, தலிபான் இனவாத குழுக்கள் போன்ற பயங்கரவாத இயக்கங்கள் இயங்கி வருகின்றன. ஹோட்டல்கள், உணவகங்கள், வழிபாட்டுத் தளங்கள், பள்ளிகள், பொழுதுபோக்கு இடங்கள், வர்த்தக வளாகங்கள் போன்ற மக்கள் செல்லும் இடங்கள் பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகி வருவதாக அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் மீது போர் தொடுத்தால் பயங்கர விளைவுகள் ஏற்படும்

## ஈரான் மதத் தலைவர் எச்சரிக்கை



(தெஹ்ரான்)


ஈரான் மீது போர் தொடுத்தால் பதிலடி கொடுக்கத் தயார் என ஈரான் நாட்டின் மதத்தலைவர் அயதுல்லா அலி கமேனி எச்சரித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது எதிர்வரும் ஏப்ரல், மே அல்லது ஜுன் மாதங்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா கூறியதாக அமெரிக்காவில் இருந்து வெளியாகும்த் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தகவல் வெளியிட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஈரான் மக்கள் மத்தியில் உரையாற்றிய அந்நாட்டின் மதத் தலைவர் அயதுல்லா அலி கமேனி, ஈரானை மிரட்டுவதோ, தாக்குவதோ அமெரிக்காவுக்கு அபாயமாகத்தான் முடியும்.

பொருளாதாரத் தடைகளால் ஈரானின் அணுசக்தி முன்னேற்றத்தை தடுக்க முடியாது. பொருளாதாரத் தடைகள் மற்றும் போர் ஆகிய மிரட்டல்களுக்கு பதிலடியாக நாங்களும் எங்கள் பாணியில் மிரட்டலை அமுல்படுத்த வேண்டி வரும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# சிரியாவில் எறிகணைத் தாக்குதலுக்கு 217 பேர் பலி



சிரிய அரசுக்கு எதிராக பிரதானமாக ஆர்ப்பாட்டங்கள் இடம் பெறும் ஹொம்ஸ் நகரில் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 217 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட சிரிய மனித உரிமை கண்காணிப்பாளர்களை மேற்கோள்காட்டி ரொய்ட்டர் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

சிரிய அரச படையினர்கள் ஆட்லறிகள் மற்றும் மோட்டார்களைப் பயன்படுத்தி சுமார் 36 மணியத்தியாலங்கள் இந்த தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

பஷார் அல் அசாத்தின் படையினர்களுக்கு எதிராக ஹொம்ஸ் நகரில் கிளர்ச்சியாளர்கள் உருவாகி வருவது அதிகரித்துள்ள நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இதேவேளை ஹொம்ஸ் நகர மக்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் பொருட்டு, ஹமா மற்றும் இத்தாலி நகர வீதிகளில் மக்கள் ஒன்று கூடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இளம்பெண்ணை துன்புறுத்தியதால் தலையை இழந்தார் இளைஞன்

சவூதியில் இளம் பெண்ணை உடல் ரீதியாக துன்புறுத்தி கொலை செய்த வழக்கில் இளைஞர் ஒருவருக்கு தலையை துண்டித்து தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பெண்களை உடல் ரீதியாக துன்புறுத்துதல், போதை மருந்து கடத்துதல், கொலை உட்பட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவர்களுக்கு 'காரிய சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சவூதி அரேபிய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது: சமி அல் மெகலா.்.பி என்பவர் அவரது உறவினரான இளம் பெண்ணை உடல் ரீதியாக துன்புறுத்தி படுகொலை செய்துள்ளார்.

இக்குற்றத்திற்காக அவர் கைது செய்யப்பட்டார். அதன் பின் மெதீனா நகரில் உள்ள தண்டனை நிறைவேற்றும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு மூன்று பேர் கொண்டவர்கள் அவரது தலையை துண்டித்து தண்டனை நிறைவேற்றினர்.

இதன் மூலம் சவூதியில் கொடிய குற்றங்களுக்காக கடந்த ஒரு ஆண்டுகளில் 76 பேருக்கு கொடூர தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும், ஐ.நா மனித உரிமை அமைப்பு இது போன்ற தண்டனைகளை கைவிடும்படி ஏற்கனவே வலியுறுத்தி வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ஈரான் ரொக்கட் சோதனை



(தெஹ்ரான்)

சிறிய ரக ரொக்கெட் ஒன்றை விண்ணில் செலுத்தி ஈரான் சோதனை நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த ரொக்கெட்டானது இயற்கை பேரிடர் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த தகவல்களை சேகரிப்பதற்காக செலுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. தலைநகர் தெஹ்ரானின் 50 கி.மீ தொலைவில் உள்ள ரொக்கெட் ஏவுதளத்திலிருந்து இந்த ரொக்கெட்டினை ஈரான் ஏவி சோதனை நடத்தியது. இந்த ரொக்கெட்டின் எடை 110 பவுண்ட் ஆகும்.

இந்நிகழ்ச்சியின் போது அந்நாட்டு ஜனாதிபதி முகமது அகமது நிஜாத், வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி அக்பர் சலேஹி, அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் கம்ரன் டேனிஸ்ஜோ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதனை அந்நாட்டு அரசு தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பியது. உள்நாட்டிலேயே வடிவமைகப்பட்ட இந்த ரொக்கெட், காலநிலைமாற்றம், இயற்கை பேரழிவு உட்பட நிகழ்வுகளின் விவரங்களை சேகரித்து பூமிக்கு அனுப்பும் என ஈரான் இஸ்லாமிக் குடியரசு என்ற செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# பதிவிருக்கப் பெட்டகம்

கல்லூரியில் படிக்கும் பெண் என்பது தமிழ்ப்படங்களைப் பொறுத்தவரை ஒரு விபரீதமான சிருஷ்டி. வீட்டில் எதிர்ப்பு, வீட்டு வேலை, தனியிடம் இல்லாமை, அலட்சியம் இவற்றுக்கிடையிலும் படித்துப் பட்டம் பெறுகிறார்கள் பெண்கள். இந்த யதார்த்தத்துக்கும் தமிழ்ப் படக்கல்லூரி மாணவி பாத்திரத்துக்கும் எவ்வளவு பெரிய இடைவெளி!

இன்னொரு விபரீதமான போக்கு, ஒருவன் ஒரு பெண்ணைத் திட்டமிட்டுப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திவிட்டால் உடனே அப்பெண் அவனே என்றும் என் கணவன் என்று அவனைத் துரத்திப போவது. இதற்கு கணவனே கண்கண்ட தெய்வம் மேல்.

புதியபாதை படத்தில் வரும் கதாநாயகன் அவன் செய்கைக்காக இன்றைய உலகில் பல நாடுகளில் மரண தண்டனை பெறுவான். சிறைவாசம் நிச்சயம். ஆனால் புதியபாதை படத்தில் அவனால் சிதைக்கப்பட்ட பெண் அவனைத் திரும்ப அடையத் தவமே புரிகிறாள்.

இன்னொரு போக்கு, எடுத்ததற்கெல்லாம் கதாநாயகியைப் பளார் என்று அடிப்பது. இது யார் அறைவது என்ற பேதமில்லை. காதலன் அறைவான், தந்தை, தனயன், தாய், தாத்தா, பாட்டி, வளர்ப்புத் தாய், சித்தி என யாருக்கும் எதற்கும் அப்பெண்ணை அடிக்கத் தமிழ்ப்படத்தில் சலுகை உண்டு.

பெண்கள் எவ்வளவோ மாறியிருக்கிறார்கள். சுயபிரக்ஞை, தம் உரிமைகள், பொறுப்புகள் பற்றிய அறிவுபூர்வமான உணர்வு, அநேக துறைகளில் ஆற்றலோடும் தன்னம்பிக்கையோடும் ஈடுபடுதல் இதெல்லாம் உள்ள கம்பீரமிக்க பெண்ணைத்தான் இன்றைய கலைவெளிப்பாட்டுத் துறையான சினிமாவில் சாத்தியமாக்க வேண்டும்.

**– அசோகமித்திரன**

மக்கள் செயற்கையான படங்களையே பார்த்துப் பார்த்துச் சலித்துப் போயிருக்கிறார்கள். முழு நிர்வாணத்துக்குக் கொஞ்சம் கம்மியான ஆடையை அணிந்து கொண்டு சுவிட்ஸர்லாந்தின் பனி மலைகளில் இடுப்பை முன்னும் பின்னுமாக ஆட்டி ஆட்டி நாயகி ஆட, அவளை ஏதோ ஒரு காட்டு மிருகத்தைப் போல் முகர்ந்து முகர்ந்து பார்த்து ஒரு நாயகன் ஆட, அந்த இருவரையும் சுற்றி ஒரு முப்பது பெண்களும் ஆண்களும் கோஷ்டியாக ஆட – இந்தக் கருமத்தையே எத்தனை காலத்துக்குப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள் தமிழர்கள்?

இன்னொரு கொடுமை, சண்டைக் காட்சி. ஐம்பது அடியாட்களைப் புரட்டிப் புரட்டி அடிக்கும் ஹீரோ. அந்த ஐம்பது தடியர்களும் போடும் நானாவிதக் கூச்சல். உடையும் கண்ணாடிகள், பலகைகள், தட்டுமுட்டுச் சாமான்கள், காய்கறி வண்டிகள்...

தமிழ் வணிக சினிமா என்பது ஒரு பைத்திய உலகம். நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்றால், தொலைக்காட்சிப் பெட்டியில் ஒலியை மட்டும் நிறுத்தி விட்டுப் பாடல் காட்சியையோ, நடனக் காட்சியையோ பாருங்கள். அப்போது புரியும்.

**– சாரு நிவேதிதா**

எந்தக் கலையையும் எதிர்க்கும் மனோபாவம், சுற்றியுள்ள சமுதாய யதார்த்தத்தை மறந்துவிட்டு, சூன்யமான நிலையிலிருந்து கலைகளை விமர்சிக்கக் கிளம்புவதாலேயே ஏற்படுகிறது. கலை – அது நல்லதாக இருந்தாலும் கெட்டதாக இருந்தாலும், ஒழுக்கமுள்ளதாக இருந்தாலும் ஒழுக்கக் கேடானதாக இருந்தாலும் அது தானாக இயங்குவதில்லை. அது சமுதாயத்தின் ஒரு பகுதி; சமுதாய சக்திகளாலேயே பெரிதும் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தச் சக்திகளின் போக்கே கலையில் தன் செல்வாக்கைப் பிரயோகிக்கிறது. அதோடு கூட ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இந்த சமுதாய சக்திகளையும் அது உருவாக்குகிறது. சினிமாவின் நன்மை தீமை பற்றி விவாதித்துக் கொண்டிருப்பவர்கள், சமுதாய கலாசார அமைப்பின் ஒரு பகுதிதான் சினிமா என்பதை காண மறந்துவிடுகிறார்கள் என்று தோன்றுகிறது. சினிமா, தானாகவே இயங்கும் சுயேச்சையானது என்று எண்ணிவிடுகிறார்கள். யதார்த்தமான சூழ்நிலையிலிருந்து பிரிந்து நின்றே சீர்திருத்தம் பேசுபவர்களாகவும் மாறிவிடுகிறார்கள்.

**– ஜெயகாந்தன்**

நுகர்வோரின் பலவீனங்களைத் தந்திரபூர்வமாகப் பயன்படுத்திக் கொண்டு நம் வாழ்க்கைக்குள் வெறும் கனவுகளைப் புகுத்திவிடும் ஆபத்தான கலைகளையே நாம் அதிகம் கொண்டாடி வருகிறோம். இந்தக் கனவுகளில் மிதந்தபடி யதார்த்தத்திலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது பெரும்பாலான மனங்களின் இயல்பாக இருக்கிறது. இதைப் பயன்படுத்தி வெற்றியடைகின்றன வணிகக் கலைகள். மாறாக, நல்ல கலை – அனுபவம் சார்ந்து வாழ்க்கையின் சிக்கலைப் பற்றி விவாதிக்கும். வாழ்க்கையின் நிதர்சனத்தைக் கவனப்படுத்துவதன் மூலம் நமக்கும் வாழ்க்கைக்குமான உறவை ஒழுங்கு செய்ய முயலும். வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான ஒரு சூழலையும் தயாரிப்பையும் உருவாக்கும். கலைப்படைப்பு என்ற தகுதி பெறுபவை கட்டாயம் நமக்கும் புற உலகுக்குமான உறவுநிலையில் மாற்றங்களை நிகழ்த்தியே தீரும்.

**– அசதா**

# இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலை

— பகவான் சிங்

**தமிழ் மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் சம வாய்ப்பை அளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிரந்தரத் தீர்வை, ராஜபக்ஷவால் அளிக்க முடியாது என்றால், வேறு ஒருவராலும் அதை அளிக்க இயலாது.**

வடபகுதித் தமிழ் மக்கள் அரசியல் திருப்பங்களை விட, யதார்த்த அறிவை முன்னிறுத்தி தங்களது வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்வதில் கவனமாக இருக்கிறார்கள். கிளிநொச்சியில் உள்ள ஹிந்து கல்லூரி ஆசிரியராகப் பணிபுரியும் புண்ணியமூர்த்தி ஜெகதீஸ்வரனையும், அவரது குடும்பத்தினரையும் அவரது வீட்டில் சந்தித்தேன்.

'கடந்த காலத்தின் கைதிகளாய் நின்றுவிடக் கூடாது. எங்கள் வாழ்வை, வீடுகளை, சமூகத்தை நாங்கள் திரும்ப கட்டமைத்தாக வேண்டும்' என்றார் புண்ணியமூர்த்தி. அவரது இளைய சகோதரர் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர். 1998ஆம் ஆண்டு நடந்த போரில் கொல்லப்பட்டு விட்டார். இறுதிக்கட்டப் போர் நடந்த சமயத்தில் புண்ணியமூர்த்தி, இராணுவத்தின தாக்குதலில் இருந்து தப்பிக்க, தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் போரில் பின்வாங்கிச் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளோடு சேர்ந்து பயணமாகி இருக்கிறார்.

'புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நாங்கள் அகப்பட்டிருந்தோம். எங்களைச் சுற்றிலும் குண்டுகள் விழுந்து கொண்டிருந்தன. எனினும் அந்த பயங்கர யுத்தத்தில் உயிர் தப்பிப் பிழைத்து விட்டோம்' என்றார் புண்ணியமூர்த்தி.

புண்ணியமூர்த்தியின் வீட்டிற்கு கதவுகளோ ஜன்னல்களோ இல்லை. பழைய புடவைகள் திரைச் சீலைகளாகத் தொங்கிக் கொண்டிருந்தன. போரின் போது இராணுவத் தாக்குதலில் இருந்து தப்பிக்க, வீட்டில் இருந்து வெளியேறிய போது மற்ற பொருட்களுடன், கதவுகளையும் ஜன்னல்களையும் பெயர்த்து, போகும் இடங்களுக்கெல்லாம் வண்டியில் கொண்டு சென்றிருக்கிறார்.

'முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்டப் போரின்போது, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தப்பியோடினோம். அப்போது எங்களது உடமைகளின் பெரும் பகுதியை அப்படியே விட்டு விட்டு ஓடினோம். எனக்கு கொஞ்சம் பணம் வரும். அப்போது கதவுகளையும் ஜன்னல்களையும் வாங்கிக் கொள்வேன்' என்றார் புண்ணியமூர்த்தி.

புண்ணியமூர்த்தியின் வீட்டிற்கு அருகில் 32 வயது கணேஷ் வாழ்கிறார். அவர் முன்னாள் எல்.ரி.ரி.ஈ. போராளி. அரசாங்க 'பயிற்சி'க்குப் பிறகு விடுவிக்கப்பட்டிருக்கிறார். அவர் இப்போது கூலித் தொழிலாளியாக வேலை பார்க்கிறார். காரணம், பல வருடங்களுக்கு முன் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டு 'போராளி'யாகப் போய் விட்டதால், வேறு எந்தத் தொழிலும் செய்ய அவருக்குத் தெரியவில்லை.

'எங்களுக்கு கொஞ்சம் நிலம் இருக்கிறது. சில சமயம் அதில் வேலை செய்ய கணேஷை அழைப்போம். இங்கேயே பக்கத்தில் வேறு ஒரு முன்னாள் எல்.ரி.ரி.ஈ.காரர் தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வாழ்கிறார். மற்ற யாரையும் போலவே அவர்களை நாங்கள் நடத்துகிறோம். அவர்களும் கூட தங்களது கடந்த காலத்தைக் குறித்து பேச விரும்புவதில்லை' என்றார் புண்ணியமூர்த்தி.

என் வகுப்பில் 21 மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களில் ஏழு பேர் பெண் பிள்ளைகள். அவர்களில் சிலர் யுத்த அடையாளங்களின் சுமையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். போரினால் உண்டான வெளிப்புற காயங்கள் ஆறிவிட்டன. ஆனால், தங்களது அன்புக்குரியவர்களின் மரணத்தை காண நேரிட்டதால், உண்டான துயரத்தினால் இன்னமும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் அவர்களோடு பேசுகிறோம் அல்லது அவர்களைப் பேச வைக்க உற்சாகப்படுத்துகிறோம். ஆனால், அவர்கள் மௌனம் காக்கவே விரும்புகிறார்கள் என்பதுதான் சோகமான விஷயம். அது மிகுந்த சஞ்சலத்தைத் தருகிறது' என்ற ஆசிரியர் புண்ணியமூர்த்தி, இன்னும் நிறைய விவரித்தார். அவரிடம் இருந்து நான் விடைபெறும்போது, 'போரினால் பாதிக்கப்பட்ட பல குழந்தைகளுக்கு அடைக்கலம் தந்திருக்கும் அனாதை இல்லத்திற்குச் சென்று பாருங்கள்' என்று என்னிடம் வலியுறுத்தினார்.

காரில் சென்றால் புண்ணியமூர்த்தியின் வீட்டிலிருந்து பத்து நிமிட பயண தூரத்தில் அந்த ஆச்சிரமம் இருக்கிறது. 'மஹாதேவா ஆச்சிரமம் - குழந்தைகள் இல்லம்' என்பது அதன் பெயர். அங்கு 296 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களில் 160 பேர் பெண் குழந்தைகள்.


Rajanayagam

ஆச்சிரமத்தில் தங்கியிருக்கும் குழந்தைகளில் சிலர் அனாதைகள் அல்ல. அவர்களுக்குப் பெற்றோர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்.ரி.ரி.ஈ.யில் இருந்தவர்கள் என்பதால், கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

'ஆச்சிரமத்தில் உள்ள குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு தலா 16 ரூபா 66 சதம்தான் அரசாங்கம் ஒதுக்கி இருக்கிறது (16 ரூபா 66 சதத்துக்கு கொழும்பு நகரில் ஒரு கோப்பைத் தேநீர் கூட வாங்க முடியாது). அரசு ஒதுக்கீடு செய்திருக்கிற இத்தொகையும் மிகவும் தாமதமாகத்தான் வருகிறது. கருணை உள்ளம் கொண்ட வெளி நாடு வாழ் தமிழர்கள் சிலரிடம் இருந்து கொஞ்சம் நன்கொடைகள் கிடைக்கின்றன. ஆனால், அதுவும் கூட கடந்த மூன்று மாதங்களாக வற்றிப் போய்விட்டன' என்று இராஜநாயகம் தெரிவித்தார்.

இராஜநாயகம், கிளிநொச்சியின் அரசாங்க அதிபராக 16 வருடங்கள் பணியாற்றியவர். இலங்கையில், அரசாங்க அதிபர் என்ற பதவி, நமது தமிழ்நாட்டின் மாவட்டக் கலெக்டர் பதவியைப் போன்றது. அரசாங்க அதிபர் பதவியில் இருந்து 2007ஆம் ஆண்டு ஓய்வு பெற்று விட்டார். இப்போது மஹாதேவ ஆச்சிரமம் குழந்தைகள் இல்லத்தின் மேலாளராக இருக்கிறார்.

மிகச் சிறிய அளவிலான உதவிகள் கூட, ஆச்சிரமத்தில் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு நன்மை பயக்கும் என்பது யதார்த்த நிலையாக இருக்கிறது. அப்படி நன்கொடை அளிக்க விரும்புகிறவர்கள் மிகவும் நேர்மையான, குழந்தைகள் இல்லச் சேவையில் தன்னை முழுமையான அக்கறையுடன் ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் இந்த ஆச்சிரம நிர்வாகியைத் தொடர்பு கொள்ளலாம். அவரது தொலைபேசி எண் +94770604950.

கனடா நாட்டில் இருந்து ஏராளமான குடும்பங்கள் சுற்றுலாப் பயணிகளாக மட்டக்களப்பு கடற்கரையில் வந்து குவிகிறார்கள். அந்தக் குடும்பங்களைச் சார்ந்த கடற்கரையில் விளையாடிக் கொண்டு இருக்கும் ஒரு குழந்தை, யாழ்ப்பாணத்தில் உள்ள தனது மூதாதையர் வீட்டிற்கு வந்திருக்கிறது. அந்தக் குழந்தையின் தந்தை, 'பாதுகாக்கப்பட்ட பகுதி' என்ற பெயரால் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கும், தனது குடும்பத்தின் விளைநிலத்தை மீட்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்காக வந்திருக்கிறார்.

கனடாவில் இருந்து வந்த குழந்தை கவலையற்று விளையாடிக் கொண்டிருக்கிறது. அனாதையாக ஆச்சிரமத்தில் தங்கி இருக்கும் குழந்தைகள் அரசாங்க மான்யத்தையும், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நன்கொடையையுமே சார்ந்து இருக்கின்றன.

இலங்கையின் இத்துயரம் மிகுந்த சூழலை, கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக மிகுந்த அக்கறையுடனும், சோகத்துடனும் நான் தொடர்ந்து கவனித்து வருகிறேன். இலங்கைத் தமிழர்கள் மிகச் சிரமமான சூழ்நிலையிலும் தாக்குப் பிடித்து வாழும் வலிமை பெற்றவர்கள் என்பது மட்டுமல்ல, காரிருள் போல் சூழ்ந்த அவநம்பிக்கைக்கு மத்தியிலும் முன்நோக்கிப் பயணம் செய்கிற மனஉறுதி மிக்க குணம் கொண்டவர்கள் என்பதையும் கண்டிருக்கிறேன்.

1985ஆம் ஆண்டில் நான் முதல் முதலாக யாழ்ப்பாணத்திற்குச் சென்றேன். அப்போது ரோந்து வரும் இராணுவத்தினரின் கண்களில் படாமல் சைக்கிள் ஓட்டித் தப்பித்து, ரியூஷன் வகுப்புகளைச் சென்றடையும் சிறுவர்களைப் பார்த்திருக்கிறேன்.

நான் ஜேர்மன் நாட்டிற்குச் சென்றிருந்தபோது, அந்த நாட்டின் பத்திரிகையாளர்கள், உறைபனி அளவுக்குக் கடுங்குளிர் நிலவும் தொழிற்சாலைகளில் மீன் துண்டுகளைப் பாக்கெட் செய்யும் கடுமையான வேலைகள் முடித்து விட்டு வீடு திரும்பும் இலங்கைத் தமிழ்ப் பெண்கள், பண்டிகை காலங்களில் தங்களது வீட்டு வாசல்களில் கோலம் போடுவதை சிலாகித்துப் பேசினார்கள்.

எனது லண்டன் பயணத்தில் பெரும் செல்வந்தரான இலங்கைத் தமிழர் ஒருவரது மாளிகைக்குச் சென்றிருந்தேன். உணவருந்தும் டைனிங் டேபிளில் அமர்ந்திருக்கும் போது, தமிழில் மட்டுமே பேச வேண்டும் என்பது அந்தக் குடும்பத்தின் சட்டமாக இருந்தது. அதை மீறி விட்ட குற்றத்திற்காக தனது இள வயதுப் பேரனை அவனது தாத்தா கடுமையாகக் கடிந்து கொண்டார். அவரது தாய்மொழிப் பற்றைக் கண்டு என் கண்கள் கலங்கின.



இலங்கைத் தமிழர்கள் எந்தச் சூழ்நிலையிலும் தங்களது சொந்த அடையாளங்களை இழந்து விடுவதில்லை என்பதற்கு உதாரணங்களாக இந்த இரண்டு சம்பவங்களை இங்கு தெரிவித்துள்ளேன்.

அந்த வகையில் இராஜநாயகத்தின் பாதுகாப்பில், அனாதையாக இருக்கிற பெண் பிள்ளையும் கூட தனது நம்பிக்கையை ஒரு நாளும் இழந்து விடாது. அந்தக் குழந்தையும் ஒரு நாள் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நுழையும். அதன் தொடர்ச்சியாக கனடாவிலோ அல்லது அமெரிகாவிலோ வாழும் இலங்கைத் தமிழர்களைப் போல் ஆராய்ச்சிக் கூடங்களைச் சென்றடையும்.

இலங்கை அதிபர் ராஜபக்ஷ ஈழத்திற்கு எதிரான போரில் வெற்றி கண்டிருக்கிறார். அவருக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கிறது. பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் மத்தியில் அவருக்கு ஈடிணையில்லாத ஆதரவு இருக்கிறது. கொழும்பில் உள்ள அவரது அரசியல் எதிரிகளே கூட, அவரை 'ராஜா மகிந்தா' என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார்கள்.

'ராஜா மகிந்தா' என்பது இலங்கையை ஆண்ட அரசர் துத்தாகாமினியுடன் ஒப்பிட்டுக் கூறப்படும் பெயராம். இலங்கையின் வட பகுதியில் தமிழ் ஆட்சியாளர்களின் மேலாதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்த துத்தாகாமினி, இலங்கையின் தேசிய நாயகன். அந்த அரசனுடன் ஒப்பிடும் அளவிற்கு இப்போது ராஜபக்ஷவின் செல்வாக்கு நிலவுகிறது.

தமிழ் மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் சம வாய்ப்பை அளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிரந்தரத் தீர்வை, ராஜபக்ஷவால் அளிக்க முடியாது என்றால், வேறு ஒருவராலும் அதை அளிக்க இயலாது. வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எதிரான போரில் ராஜா மகிந்தா வெற்றி கண்டிருக்கிறார்.

ஆனால், இராஜநாயகத்தின் ஆச்சிரமக் குழந்தைகள் இல்லத்தின் அனாதைச் சிறுமியுடன் ராஜா மகிந்தா அமைதி உடன்பாட்டை இப்போது ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும். அப்படி ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால், அது பெரும் துயரமாக முடியும் - அது அந்தச் சின்னஞ்சிறு பெண் பிள்ளைக்கு மட்டுமல்ல!

*நன்றி: துக்ளக்*

# சங்கங்களின் அறிவுறுத்தலைப் பின்பற்றி இறால் பிடிக்குமாறு வேண்டுகோள்



பருவத்துக்கு முந்திய இறால் பிடியை தவிர்க்குமாறும் உரிய காலப்பகுதியில் சங்கங்களின் அறிவுறுத்தலைப் பின்பற்றித் தொழிலை ஆரம்பிக்குமாறும் கண்டாவளைப் பிரதேச கடற்றொழிலாளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பருவத்துக்கு முந்திய இறால் பிடியினால் உரிய வருவாயைப் பெறமுடியாது என்றும் வளர்ச்சியடையாத இறால் குஞ்சுகள் அபபோது அழிவடையும் அபாயமே ஏற்படும் என்றும் மீனவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான விளக்கமளிக்கும் நிகழ்வும் கலந்துரையாடலும் நேற்று முன்தினம் காலை கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்றது.

கரைச்சி வடக்குக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் எஸ்.கணேசபிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முறைப்படுத்தப்பட்ட வகையில் திட்டமிட்ட இறால் பிடியைப் பின்பற்றுமாறு தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

ஆனையிறவுக் கடனீரேரியில் ஆண்டுதோறும் நடைபெறும பருவகால இறால்பிடியை மேம்படுத்தித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கான வருவாயை அதிகரிப்பதற்கான திட்டமொன்றினை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு ஆனையிறவு - சுண்டிக்குளம் கடனீரேரியில் சுமார் 28 இலட்சம் இறால் குஞ்சுகள் கடலில் விடப்பட்டன. இந்த இறால்குஞ்சுகள் வளர்வதற்கான காலப்பகுதியை எட்ட முன்னர் இறால் பிடியில் ஈடுபட்டால் உரிய பலனைப் பெறமுடியாது என இக் கலந்துரையாடலின்போது மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், தொழிலில் ஈடுபடுவோர் முறைப்படி சங்கங்களில் பதிவு செய்ய வேண்டும் என்றும் சங்கங்களின் அறிவுறுத்தலைப் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கணடாவளைப் பிரதேச செயலர் சத்தியசீலன், மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தவராஜா, மாவட்டக் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி மற்றும் கரைச்சி வடக்குக் கடற்றொழிலாளர் சங்கங்களில் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# அறிக்கை குறித்த அரசின் நிலை ஜெனிவாவில் தெளிவுபடுத்தப்படும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு


கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு, ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸில் அமர்வுகளின் போது தெளிவுபடுத்தப்படும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் யோசனைகள் தொடர்பில் மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பக் கூடிய சாத்தியம் காணப்படுவதால், இவ்வாறான சவால்களை எதிர்நோக்கக் கூடிய வகையில் பிரதிநிதிகள் குழு தயாராகி வருகின்றது.

இலங்கைக்கு எதிராக பல்வேறு சவால்கள் விடுக்கப்படுகின்றன. அந்தச் சவால்களை வெற்றிகரமாக எதிர்நோக்கக் கூடிய ஆற்றல் அரசாங்கத்திடம் காணப்படுகின்றது என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# யுனிஸ்கானின் பொறுப்பான சதம் சரிவிலிருந்து மீண்டது பாகிஸ்தான் அணி



(டுபாய்)

பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கிடையில் டுபாயில் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் யுனிஸ்கானின் சதத்தின் மூலம் பாகிஸ்தான் 180 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

முன்னதாக தனது முதல் இனிங்ஸில் 99 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பாகிஸ்தான் அணி இழந்தது. பின்னர் தனது முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவின் போது 6 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அணித்தலைவர் ஸ்ரரஸ் 41, அன்டர்ஸன் 3 ஓட்டங்களுடன் களத்திலிருந்தனர்.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பித்தவேளை, பாகிஸ்தானின் சுழலில் அன்டர்சன், மேலும் ஒரு ஓட்டம் எடுத்த நிலையிலும், புரோட்டி, ஸ்ரரஸ் 56, சுவான் 16 ஓட்டங்களுடன் வெளியேற இங்கிலாந்து அணி 141 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் அப்துர் ர.்.மான் 5, அஜ்மல் 3, உமர்குல் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். இங்கிலாந்தைவிட 32 ஓட்டங்களால் பின்தங்கிய பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது எனினும் அந்த அணியின் ஆரம்ப வீரர்களான தபீக் உமர் 6, மொகமட் ஹபீஸ் 21 விரைவில் வெளியேறினர். எனினும் அஸார் அலி, யுனிஸ்கான் இணைந்து அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர். நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்று 180 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

இதில் யுனிஸ்கான் 115, அசார் அலி 75 ஓட்டங்களுடன் ஆட்டமிழகாதுள்ளனர். பந்துவீச்சில் அன்டர்சன், பனேசர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

# கீரிமலை நகுலேஸ்வர ஆலய திருக்கதவு திறப்பு

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நேற்றுக் காலை கோயில் திருக்கதவு திறக்கும் பூஜை நடைபெற்றது. கும்பாபிஷேக நிகழ்வுகளுக்காகத் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் அந்தணர்களுடன், யாழ்ப்பாணக் சிவாச்சாரியார்களும், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய பிரதம குருவுடன் இணைந்து விசேட பூஜை ஆராதனைகளை நடாத்தினர். இந்தியாவின் கேரள மாநிலத்திலிருந்து வருகை தந்த ஜெண்டை வாத்தியக் கலைஞர்களின் ஜெண்டை வாத்திய இசையுடன் காலையில் திருக்கதவு திறக்கும் விசேட பூஜை நடைபெற்று, தொடர்ந்து ஆலயத்துக்குள் விசேட பூஜைகள் நடைபெற்றன.

## சமாதானத்தை...

முயற்சிக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் நாங்கள் பதிலடி கொடுக்கவேண்டும். சுதந்திரம் என்பது இன்று எமது முன்னுள்ள பாரிய பொறுப்பாகும். அதனைக் கட்டிக்காக்க வேண்டிய கடமை எம அனைவருக்கும் உள்ளது. யுத்தத்தைக் காரணம் காட்டி சுதந்திரத்தை மறக்கடித்த நிலைமை அன்று இருந்தது. இன்று யுத்தத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்ட மண்ணிலிருந்து சுதந்திரத்தைக் கொண்டாடுமளவுக்கு நாம் வந்துள்ளோம். கிராமத்தைப் பாதுகாக்க பதுங்கு குழிகளையும் துப்பாக்கிகளையும் கேட்டிருந்த மக்கள் இன்று அபிவிருத்தி, சுதந்திரம் மற்றும் பரிசுத்தமான நாட்டை வேண்டி நிற்கின்றனர்.

எமக்கு எதிராக வெளி நாடுகளிலுள்ள பயங்கரவாத சக்திகள் பல்வேறு பொய்ப் பிரசாரங்களையும் சதிவலைகளையும் பின்னிவருகின்றன. இங்குள்ள சிலரும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்றனர். சில நாடுகளில் இடம்பெற்ற பிரிவினைவாதத்தினை இலங்கைக்குள்ளும் நடத்துவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் நாங்கள் பதிலடி கொடுக்கவேண்டும்.

நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்துவது தனியொருவரினால் செய்யக்கூடியது அல்ல. அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த உண்மையை புரிந்து கொள்ளவும் வேண்டும். வெளிநாடுகளிலிருந்து உதவிகளைப் பெறுபவர்கள் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். நாட்டுக்கும் நாட்டின் அனைத்து இன மக்களுக்கும் பொதுவான நிரந்தரமான சமாதானக் கொள்கையொன்றை ஏற்படுத்த வேண்டும்

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவானது தனது அறிக்கையில் கடந்தகால பிரச்சினைகளுக்கு அனைவரும் பொறுப்பேற்க வேண்டுமெனத் தெரிவித்திருந்தது. எமது மனசாட்சியின்படி நாம் அனைவரும் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். கடந்த டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி இந்த ஆணைக்குழு தனது பரிந்துரைகளை வெளியிட்டது. அதன் பரிந்துரைகளை ஏற்று குறுகிய காலத்திற்குள். அதாவது கடந்த 6 வார காலங்களாக நாம் அவற்றை நிறைவேற்றியே வருகின்றோம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும்போது சர்வஜன வாக்குகளால் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத்தினை ஒதுக்கி வைத்துவிட்ட எம்மால் முடியாது. நாட்டின் நீதி, சட்டம் அனைத்துக்கும் நாம் அடிபணிவது போன்றே ஜனநாயக சக்தியான நாடாளுமன்றுக்கும் நாம் கட்டுப்பட்டு செயற்படவேண்டும்.

சர்வஜன வாக்குகளினால் மாத்திரமே ஓர் அரசாங்கத்தினை கவிழ்க்கும் கட்டுப்பாட்டுக்குள் நாம் உள்ளோம். அதை நாம் பாதுகாக்க வேண்டும். அந்த வகையில் ஜனநாயக நீரோட்டத்தில் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் சக்தி நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு மாத்திரமே உண்டு. இதில் கலந்துகொண்டு அனைத்து பிரச்சினைகள் குறித்தும் செவிமடுத்து, மக்கள் தேவைகளை கவனத்திற்கொண்டு பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொறுப்பு அனைத்து கட்சிகளுக்கும் உண்டு. எனவே அனைத்து கட்சிகளும் இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெற்று தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என ஜனாதிபதி தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## இனப்பிரச்சினைக்கு...

இவ்வாறான ஓர் நடவடிக்கையின் மூலம் நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கமுடியும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. 13 ஆம் திருத்தச் சட்ட மூலமும், தேசிய இனப்பிரச்சினையும் ஏனைய பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படுவதாக குறிபபிட்டுள்ளது. முதலாளித்துவ கொள்கைகளை உடைய இந்த அரசியல் கட்சிகள் மக்களின் மெய்யான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 13 ஆவது திருத்தத்தை...

முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமால் பெரேரா தெரிவிக்கையில், ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு...

விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர். காலையில் யாழ். நூல் நிலையத்திற்கு வரும் இக்குழுவினர் அங்கு வடமாகாண ஆளுநருடனான நிகழ்வொன்றில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் அரச அதிபரும் கலந்துகொள்ளவுள்ளார். தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்ந்துள்ள பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிடவுள்ளனர். பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்திற்கு இக்குழு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

## நீர் மின்வலு...

பின்னர் முதல் தடவையாக வழங்கப்படவுள்ளது. இதன்மூலம் வடமாகாணத்துக்கான மின்னிணைப்பானது தேசிய மின்வழங்கல் கட்டமைப்புடன் இணைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ். குடாநாட்டுக்கான மின்சாரம் மின்பிறப்பாக்கிகளின் மூலமே வழங்கப்பட்டுவருகிறது. இந்தப் புதிய இணைப்பின் மூலம் குடாநாட்டில் சீரற்ற நிலையில் இருக்கும் மின்சார விநியோகம் சீரமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பரந்தனில் இந்த இணைப்பு உள்ளதனால், இந்த விநியோக இணைப்பு நிகழ்வு அங்கு நடைபெறவுள்ளதென கிளிநொச்சி மாவட்ட மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரத்து 450 கைதிகள் விடுதலை

## யாழிலும் எண்மர் விடுவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 64 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு 450 சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இதில் யாழ். சிறைச்சாலையிலிருந்தும் 8 கைதிகள் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றும் அபராதம் செலுத்த முடியாத சிறைக் கைதிகளே விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ.டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்தார்.

இதுதவிர வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து 145 கைதிகளும் மஹர சிறைச்சாலையிலிருந்து 115 கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

சுங்க கட்டளைச்சட்ட மீறல் மற்றும் ஆட்கொலை உட்பட 27 வகையான குற்றங்கள் தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட மாட்டார்கள்.

இதேவேளை, சுதந்திர தினத்தை முன்னிட்டு மேலும் பெரும்பாலான கைதிகளின் தண்டனைக்காலத்தை ஒரு வாரத்தால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களில் அதிகமானோர் போகம்பறை சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே யாழ். சிறைச்சாலையில் நடைபெற்ற நிகழ்வில் சிறைச்சாலை அத்தியட்சகர் செனரத் பண்டார, பிரதான ஜெயிலர் இந்திரகுமார் ஆகியோர் இந்தக் கைதிகளை விடுவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கைதிகளை விடுதலை செய்தனர்.

இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 3 கைதிகளும், வெளி மாவட்டத்தைச் சேர்ந்த 5 கைதிகளும் அடங்குகின்றனர்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட கைதிகளில் நால்வர் பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ். சிறைச்சாலையின் அலுவலகத்தில் வைத்தும் ஏனைய 5 கைதிகளும் பலாலியில் அமைந்துள்ள விவசாயப் பண்ணையில் வைத்தும் விடுதலை செய்யப்பட்டனர்.

தற்சமயம் யாழ். சிறைச்சாலையில் 228 கைதிகள் உள்ளனர். இவர்களில் 16 பெண் கைதிகளும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ். சிறைச்சாலையில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வில் காலையில் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் செனரத் பண்டார தேசியக் கொடியை ஏற்றிவைத்து சுதந்திர தின நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (பா)

# மந்திகை வைத்தியசாலையில் குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு

(வடமராட்சி)

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவிவருகின்றது. பிரதானமாக 'ஓ' நெகட்டிவ் வகைக்கு தட்டுப்பாடுள்ளதாக இரத்த வங்கி அதிகாரி சிறிநிலாந்தி தெரிவித்துள்ளார்.


மேலும் வைத்தியசாலைக்குத் தேவையான இரத்தம் குருதிக் கொடையாளர்கள் மூலமும் சில சந்தர்ப்பங்களில் யாழ். போதனா வைத்தியசாலையிலும் இருந்து பெறப்படுகின்றது.

இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்கு மக்கள் மனமுவந்து குருதிக்கொடை செய்ய வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

இரத்த வங்கியில் நேரடியாக வந்து கடந்த 2010 ஆம் ஆண்டு 122 குருதிக்கொடையாளர்களும், 2011 ஆம் ஆண்டு 199 குருதிக்கொடையாளர்களும் தானம் செய்துள்ளனர்.

அத்தோடு இரத்த வங்கியினால் கிராமம் தோறும் சென்று நடமாடும் சேவையும் நடத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு 815 குருதிக்கொடையாளர்களும் 2011 ஆம் ஆண்டு 559 குருதிக் கொடையாளர்களும் தானம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (116)

# பெருமஞ்சத் திருவிழா



(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூச தின பெருமஞ்சத் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

காலை 10.00 மணிக்கு 1008 சங்குகளால் அபிஷேகம் இடம்பெற்று விசேட பூசை இடம்பெறும். மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், சண்முகார்ச்சனையும் இடம்பெற்று 7.00 மணிக்கு திருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் வீதி வலம் வருவார்.

இப்பெருமஞ்சம் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததும், இணுவிலில் வாழ்ந்த மகான் பெரிய சன்னாசியார் என்பவரால் இந்திய சிற்பக் கலைஞர்களைக் கொண்டு கட்டப்பட்டதாகும்.

# மாரடைப்பால் இறந்தவரது சடலம் சுன்னாகம் பொலிஸார் மீட்டனர்

தாவடியைச் சேர்ந்த நபரொருவரின் சடலம், கைவிடப்பட்ட மலசல கூடத்திலிருந்து மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாவடியைச் சேர்ந்த முத்துச்சாமி ஆனந்தராசா (வயது - 49) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கிராம உத்தியோகத்தரினால் சுன்னாகம் பொலிஸாருக்கு குறித்த சம்பவம் தொடர்பாக தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மலசல கூடத்திலிருந்த சடலத்தை மீட்டுள்ளனர். பிரேத பரிசோதனையில் குறித்த நபர் மாரடைப்பால் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட இவர், மன நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தனது உறவினர்களுடன் வாழ்ந்து வந்ததாகவும் தெரியவருகின்றது.

# 63 கிலோமீற்றர் தூரம் மிதிவெடிகள் அகற்றல்

(கொழும்பு)

ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரையான புகையிரதப் பாதையில் 63 கிலோ மீற்றர் தூரத்திற்கு முதற்கட்டமாக மிதிவெடியகற்றும் பணிகள் பூர்த்தியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையான 138 கிலோ மீற்றர் புகையிரதப்பாதையில் மிதிவெடி அகற்றும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன் அடிப்படையில் மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் 63 கிலோ மீற்றர் தூரம் மிதிவெடி அகற்றப்பட்டுள்ளது.

இம்மிதிவெடி அகற்றும் பணியில் புகையிரதப்பாதை அமைக்கும் இந்தியாவின் நிறுவனத்தோடு இலங்கையின் இராணுவத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.ஓ.எம். அமைப்பின் பிரதிநிதிகள் யாழ். கட்டளைத் தளபதியுடன் சந்திப்பு

## யாழ். நிலைமைகள் குறித்து கேட்டறிந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து சர்வதேச புலம்பெயர் அமைப்பின் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவுடன் கலந்துரையாடியுள்ளனர். இந்தக் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை இரவு பலாலி படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.



இதன் போது, மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வட மாகாண ஆளுநர் செயலகம் மற்றும் படையினர் இணைந்து செயற்படுத்தும் நண்டு வளர்ப்புத் திட்டம் ஆகியன தொடர்பில் கேட்டறிந்தனர்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு படையினரால் வீடுகள் அமைத்துக் கொடுக்கின்றமை, மீள்குடியேற்றப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் படையினர் ஈடுபட்டுள்ளமை தொடர்பிலும் கட்டளைத் தளபதி ஹத்துருசிங்கவினால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது, முன்னாள் போராளிகள் மற்றும் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை சர்வதேச புலம்பெயர் அமைப்பின் பிரதிநிதிகள் பாராட்டியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் ஆசிய பசுபிக் நாட்டிற்குரிய பிராந்திய முகாமையாளர் அன்ரு றெபேட் வுறாஸ், கொழும்பிற்கான பிரதிநிதி றிச்சாட் டென்சியர், அபிவிருத்தி நன்கொடை இணைப்பாளர் யுசுப்பி லொப் றேற் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கடலிலிருந்து ஒதுங்கிய நுரை கல்முனை மக்கள் அச்சம்



(மட்டக்களப்பு)

கல்முனை கடற்கரையை அண்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு கடலில் இருந்து கரையில் ஒதுங்கிய பெருமளவு நுரையால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடலில் இருந்து நுரைகள் வெளியேறி காற்றினால் அடித்து வரப்பட்டு கடற்கரையோரங்களிலும் ஊருக்குள்ளும் பரவியதையடுத்து மக்கள் அச்சமடைந்தனர்.

இது தொடர்பில் மீனவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கை யில்,

இதுபோன்ற சம்பவங்கள் முன்னரும் பலதடவைகள் இடம்பெற்றுள்ளன. கடல் கொந்தளிப்பு ஏற்படும் காலங்களில் சில வேளைகளில் சுழிக்காற்று வீசு மானால் இது போன்று நுரைகள் வெளியேறுவது வழமையாகும்.

ஆனால் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்தத்தின் பின்னர் மக்கள் இவ்வாறான விடயங்களில் கூடிய கவனம் செலுத்துகின்றனர் என்று தெரிவித்தார்.

# தேசத்திற்கு மகுடம் அடுத்த வருடம் கிழக்கில்

(அநுராதபுரம்)

2013 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் கண்காட்சியானது கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலனறுவை மாவட்டங்களை மையப்படுத்தி கிழக்கில் இக்கண்காட்சி நடைபெறும் என அவர் கூறினார்.

இவ்வருடத்திற்கான தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை அநுராதபுரத்தில் நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.